# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2025–2026

### மானியக் கோரிக்கை எண். 32

**திரு. சி.வி. கணேசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2025

# அட்டவணை


| பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|
| முன்னுரை | 1–4 |
| தொழிலாளர் துறை | 5–77 |
| தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் | 78–134 |
| வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை (வேலைவாய்ப்புப் பிரிவு) | 135–169 |
| வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை (பயிற்சிப் பிரிவு) | 170–214 |
| மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டம்) | 215–239 |

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## முன்னுரை

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையானது, அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனுக்காக பல்வேறு தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இத்துறையானது, நிலையான பணி நிலைமைகள், பணியாளர்களின் பாதுகாப்பு, உரிய சட்டங்களின்படி ஊதியம் மற்றும் கேட்புகள் ஆகியவற்றை வழங்குதலை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் தொழிலாளர்களின் நலன்களை பாதுகாக்கிறது. மேலும், தொழிலாளர் நலனுக்காகவும், அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட, பல்வேறு தொழிலாளர் நல வாரியங்கள் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையானது, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் வேலைவாய்ப்புப் பிரிவினை நிர்வகித்து வருகிறது. மேலும், தொழில் வழிகாட்டுதல், போட்டித் தேர்வுகளுக்காக இலவசமாக பயிற்சியளித்தல், தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காக சிறிய மற்றும் பெரிய வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றின் வாயிலாக மாநிலத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தலை உறுதி செய்கிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தின் பயிற்சிப் பிரிவினையும் மேற்பார்வை செய்து வருகிறது. இத்துறை தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக, மாநிலத்தின் இளைஞர்களுக்கு திறன் பயிற்சியினை வழங்கி, அவர்கள் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்பு பெறுவதை உறுதி செய்கிறது.

இத்துறையானது தொழில்நுட்பங்களின் சமீபத்திய வளர்ச்சி மற்றும் நவீன தொழிற்சாலைகளுக்கேற்ற தொழில் திறமை தேவைகளை எதிர்கொள்வதற்கென அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக மேம்படுத்தியுள்ளது.

இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் துறைத் தலைமைகள்.

(i) தொழிலாளர் ஆணையரகம்

(ii) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம்

(iii) தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம்

(iv) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சிறந்த பணி நிலைமைகள்

மற்றும் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக, நிலையான மற்றும் உகந்த தொழிற்சூழலை ஊக்குவிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இத்துறையானது தொழில் வழிகாட்டுதல் மற்றும் திறன் பயிற்சியில் கவனம் செலுத்தி மாநிலத்தின் இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பு மற்றும் சிறந்த பணியிட வாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்கிறது. இத்துறையானது காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு, அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் வாயிலாக மருத்துவ வசதி அளிக்கிறது.

# 1. தொழிலாளர் துறை

தமிழ்நாடு, நமது நாட்டின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக வளர்ச்சி பெற்றுள்ளது. வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே வலிமையான தொழில் உறவுகளை வளர்ப்பதன் மூலம் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதையும், நிறுவனங்கள் தங்களது இலக்குகளை எளிதாகவும், திறம்பட எய்துவதையும் தொழிலாளர் துறை உறுதி செய்கிறது. மேலும், தொழிலாளர்களின் சட்டப்படியான உரிமைகளை பாதுகாப்பதுடன், அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் பணி நிலைமைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்துவதை இத்துறை நோக்கமாக கொண்டுள்ளது. இத்துறை தொழிலாளர் சட்டங்களை அமலாக்கம் செய்வதுடன், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் நிலையான

மற்றும் சாதகமான தொழில் சூழலை ஏற்படுத்தும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

## 1.1. செயல்பாடுகள்

தொழிலாளர் துறையின் செயல்பாடுகளை முறைப்படுத்துதல் பணிகள் மற்றும் நலத்திட்ட பணிகள் என வகைப்படுத்தலாம்.

### 1.1.1. முறைப்படுத்தும் பணிகள்

1. சமரச பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கமான தொழில் உறவுகளை உறுதி செய்தல்.
2. ஒன்றிய மற்றும் மாநில அரசால் இயற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை செயல்படுத்துதல்.
3. தொழிலாளர் நலச்சட்டங்களின் கீழ் இருதரப்பினரது உரிமைகள் மற்றும் கடமைகளை நீதிசார் பணிகள் மூலம் நிர்ணயம் செய்தல்.

4. தொழிற்சங்கங்களைப் பதிவு செய்தல்.

5. குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு தொழிலினங்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயம் / மறுநிர்ணயம் செய்தல் மற்றும் அமலாக்கம் செய்தல்.

6. சட்டமுறை எடையளவுச் சட்ட அமலாக்கத்தின் மூலம் நுகர்வோர் நலனைப் பாதுகாத்தல்.

7. கொத்தடிமைத் தொழிலாளர்களை மீட்டு மறுவாழ்வு அளித்தல்.

8. குழந்தைத் தொழிலாளர் முறையினை அனைத்து பணிகளிலும் நீக்குதல் மற்றும் அபாயகரமான பணிகள், செயல்முறைகளில் வளரிளம் பருவத்தினரை பணியமர்த்துவதை நீக்குதல்.

9. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை முறைப்படுத்துதல்.

### 1.1.2. நலத்திட்டப் பணிகள்

1. அமைப்பு சார்ந்த மற்றும் இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் உள்ளிட்ட அமைப்புசாரா தொழில் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலவாரியங்கள் மூலம் சமூக பாதுகாப்பு பயன்கள் வழங்குதல்.

2. பணியின்போது மற்றும் பணியின் காரணமாக ஏற்படும் விபத்துகளால் ஊனமுறும் தொழிலாளர்கள் அல்லது மரணமடையும் தொழிலாளர்களைச் சார்ந்தோருக்கு இழப்பீடு வழங்குதல்.

3. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நடமாடும் மருத்துவமனைகள் மற்றும் தங்கும் இடங்கள் போன்ற சேவைகளை வழங்குதல்.

4. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

5. கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான நலத்திட்டங்கள் வழங்குதல்.

6. அமைப்புசாரா தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் திறன் பயிற்சி வழங்குதல்.

## 1.2. நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில், 1920–ஆம் ஆண்டு தொழிலாளர் துறை உருவாக்கப்பட்டது. தொழிலாளர் ஆணையரை தலைமையாகக் கொண்டு செயல்படும் இத்துறையில் கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள்,

தொழிலாளர் இணை ஆணையர்கள், தொழிலாளர் துணை ஆணையர்கள், தொழிலாளர் உதவி ஆணையர்கள், உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), கணக்கு அலுவலர், மக்கள் தொடர்பு அலுவலர், தொழிலாளர் துணை ஆய்வர்கள், தொழிலாளர் உதவி ஆய்வர்கள், முத்திரை ஆய்வர்கள் மற்றும் உதவி புரியும் பணியாளர்கள் பணிபுரிகின்றனர்.

## 1.3. தொழிலாளர் துறை மூலம் அமலாக்கம் செய்யப்படும் சட்டங்கள்

தொழிலாளர் துறை கீழ்க்காணும் சட்டங்கள் உட்பட பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

### 1.3.1. தொழில் உறவுகள் தொடர்புடைய சட்டங்கள்

தொழிற்தகராறுகள் சட்டம், 1947, தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 மற்றும் தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 ஆகியவை இந்தியாவில் செயல்படுத்தப்படும் தொழில் நல்லுறவுகள் தொடர்புடைய மூன்று முக்கிய

சட்டங்களாகும். இச்சட்டங்கள் தொழில் உறவுகளை பராமரித்தலில், வேலையளிப்போர், தொழிலாளர்கள் அவர்களது பிரதிநிதிகள் மற்றும் அரசின் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள் குறித்து விளக்குகிறது.

மேலும், இச்சட்டங்கள், தொழிற்தகராறுகளை இணக்கமாக தீர்த்தல், தொழில் நல்லுறவுகள் மற்றும் கூட்டு பேரத்திற்கு தேவையான அமைப்புகளை ஏற்படுத்துதல், தொழிற்சங்கப் பதிவுகளை முறைப்படுத்துதல், பணிநிலைமைகளை முன்கூட்டியே தெரிவிப்பதன் மூலம் அவற்றை தெளிவுபடுத்துதல் மற்றும் அவற்றின் நிலைத்தன்மையை உறுதிசெய்தல் ஆகியவற்றிற்கான நடைமுறைகளை வரையறை செய்கின்றன.

### 1.3.1.1. தொழிற் தகராறுகள் சட்டம், 1947

இச்சட்டத்தின் பிரதான நோக்கமானது, நியாயமான மற்றும் திறன்மிக்க அமைப்புகள் மூலம், தொழிற்தகராறுகளை சுமுகமாக தீர்த்தல், நடுநிலையான மற்றும் அமைதியை நிலைநாட்டும் சமரச ஒப்பந்தங்களை ஏற்படுத்துதல் ஆகியனவாகும். இந்நோக்கத்தினை பூர்த்தி செய்யும் பொருட்டு தொழிற்தகராறுகள் மீது சமரச பேச்சுவார்த்தைகள், நடுவர்மன்றங்கள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகிய விரிவான கட்டமைப்புகள் மூலம் விசாரணை மேற்கொண்டு தொழிற்தகராறுகளுக்கு உரிய தீர்வு காண இச்சட்டம் வழிவகை செய்கிறது.

தடையற்ற உற்பத்தியை உறுதி செய்வதற்கு தொழில் அமைதியை பேணுவது அத்தியாவசியமானதாகும். இதன் மூலம் தொழிலாளர்களுக்கு நிலையான வேலைவாய்ப்புகள் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. மனிதவளம்

மற்றும் மூலப்பொருட்களை திறம்பட பயன்படுத்த வழிவகை செய்வதன் மூலம் அவை வீணாவது தடுக்கப்படுவதுடன், மனித வேலை இழப்பு நாட்களை குறைக்கவும் வழிவகை செய்யப்படுகிறது. தொழில் நல்லிணக்கத்தை வளர்க்கும் பொருட்டு தொழிற்தகராறுகளை தீர்த்து வைப்பதற்கு தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்கள் முனைப்புடன் செயல்பட்டு தொழிலாளர் மற்றும் வேலையளிப்பவர் இடையே சமரசம் ஏற்படுத்தி தொழிற்தகராறுகளை தீர்த்து வைக்கின்றனர்.

2024–2025–ஆம் நிதியாண்டில், 747 தொழிற்தாவாக்களுக்கு சுமுகமான முறையில் சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டு, தொழில் அமைதி பேணப்பட்டு வருகிறது.

தொழிலாளர் துறை மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக 8 பொறியியல் நிறுவனங்கள், 3 பஞ்சாலைகள், 7 இதர நிறுவனங்களில்

வேலைநிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டு 5,379 தொழிலாளர்களின் உரிமைகளும், நலன்களும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் தீர்ப்பாயங்கள்**

தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 10–ன் கீழ் தொழில் அமைதியை நிலைநாட்டுவதற்கும், தொழில் நல்லுறவினை மேம்படுத்துவதற்கும், தொழிற்தாவாவில் தொடர்புடைய பிரச்சினைகளின் தன்மையின் அடிப்படையில் முடிவு காணப்படாத தாவாக்களில் தீர்வு காணும் பொருட்டு தொழிலாளர் நீதிமன்றங்கள் அல்லது தொழில் தீர்ப்பாயத்திற்கு அனுப்ப அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிற் தாவாக்களை விரைவாகவும் மற்றும் உரிய காலத்திலும் தீர்த்து வைப்பதன் மூலம் தொழில் துறையில் தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் சீரிய

நோக்கத்துடனும் தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிற் தீர்ப்பாயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 1.3.1.2. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்கள் சட்டமானது அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள், தங்களுக்கான தொழிற்சங்கங்களை அமைக்கவும் அதில் உறுப்பினர்களாக சேரவும், அவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கவும் உதவும் முக்கியமான சட்டமாகும். இச்சட்டம் தொழிற்சங்கங்களின் பதிவுக்கான நடைமுறைகள் குறித்து விவரிப்பதுடன், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களை முறைப்படுத்தவும் வழிவகுக்கிறது. பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கான சலுகைகளையும் பாதுகாப்பினையும் அளிப்பதன் மூலம் கூட்டு பேரத்திற்கு சாதகமான மற்றும் பாதுகாப்பு மிக்க சூழலை இச்சட்டம் ஏற்படுத்துகிறது.

2024–2025–ஆம் நிதியாண்டில், தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை மேம்படுத்துவதில் ஒரு மைல்கல்லாக 199 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 1.3.1.3. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டமானது தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகளை வேலையளிப்பவர்கள் துல்லியமாக வரையறை செய்வதை உறுதி செய்கிறது. இதன் மூலம் பணிநிபந்தனைகளின் நியாயத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் நிலைத்தன்மை உறுதிசெய்யப்படுவதுடன் தொழிலாளர்கள் பணிநிபந்தனைகளை அறிந்து கொள்ள வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டில் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

2024–2025–ஆம் நிதியாண்டில், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்களால் 368 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

**1.3.2. சம்பளம் தொடர்பான சட்டங்கள்**

சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936, குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948, சம ஊதியச் சட்டம், 1976, மிகை ஊதியம் வழங்கல் சட்டம், 1965 ஆகியவை சம்பளம் வழங்குவதை முறைப்படுத்தும் முக்கியமான சட்டங்கள் ஆகும்.

இச்சட்டங்கள், குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்தல், உரிய காலத்தில் ஊதியம் வழங்குதல், சம்பளத்திலிருந்து அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்யப்படுவதை தடுத்தல், மிகை ஊதியம் வழங்குதல் மற்றும் ஒரே வேலை அல்லது ஒரே தன்மையுடைய வேலை செய்யும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான

ஊதியம் வழங்குதல் ஆகியவற்றை முறைப்படுத்துகின்றன.

### 1.3.2.1. சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936

சம்பளப் பட்டுவாடா சட்டம், வேலையில் அமர்த்தப்பட்ட பணியாளர்களின் சம்பளத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட பிடித்தங்கள் மட்டுமே மேற்கொள்வதற்கும், உரிய காலத்தில் ஊதியம் வழங்குவதற்கும், சம்பளம் தொடர்பான கேட்பு மனுக்களை விரைந்து முடிப்பதற்கும் வகை செய்யும் மிக முக்கியமான சட்டமாகும். இச்சட்டம் ரூ.24,000/– வரை சம்பளம் ஈட்டும் பணியாளர்களுக்கு மட்டுமே பொருந்தும். குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் சம்பளம் வழங்காதது மற்றும் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக எழும் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்கும் அலுவலர்களாக பணியாளர் இழப்பீட்டு சட்ட ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2024–2025–ஆம் நிதியாண்டில், மொத்தம் 13,000 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 360 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, தொழிலாளர்களுக்கு ரூ.1,49,87,341/– வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**1.3.2.2. குறைந்த பட்ச ஊதிய சட்டம், 1948**

குறைந்தபட்ச ஊதிய சட்டம், ஒரு தொழிலாளியின் வாழ்க்கை தரத்தினை உறுதி செய்யும் முக்கியமான சட்டமாகும். இச்சட்டம் உரிய அரசால், சட்ட அட்டவணையில் உள்ள தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு, குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்வதற்கும், உரிய கால இடைவெளிகளில் மறுநிர்ணயம் செய்வதற்கும் வழிவகை செய்வதன் மூலம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும், செயல்திறனையும் உறுதிசெய்கிறது. இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை

விசாரித்து தீர்வு காணும் அலுவலர்களாக வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில், இச்சட்டத்தின் அட்டவணையில் 96 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன. உரிய கால இடைவெளிகளில் குறைந்தபட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல், பதநீர் இறக்குதல், காற்றூட்டப்பட்ட நீர் தயாரித்தல், எண்ணெய் ஆலை, இயந்திரத்தினால் காகிதம் மற்றும் காகிதம் சார்ந்த செயல்முறை, சமையல் தொழில், சலனப்படம் தயாரிக்கும் தொழில் (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட), பாய் நெசவு மற்றும் கூடை முடைதல், பாதுகாவலர் தொழில், பாரங்களை ஏற்றி இறக்குதல், தகரக் கொள்கலன்கள் தயாரித்தல், கல்வி பயிற்றுவிக்கும் நிறுவனங்கள், திரவ பெட்ரோலிய காஸ் சிலிண்டர்கள்

விநியோகித்தல், ஆட்டோமொபைல் பணிமனைகள், மர ஆலைகள், செயற்கை வைரங்களுக்கு பட்டை தீட்டுதல், கை எம்ப்ராய்டரி மற்றும் ஜரி, கைத்தறி பட்டு நெசவுத் தொழில், கைத்தறி நெசவு, விலைக்கு வாங்கும் தேயிலை தொழிற்சாலைகள் தொழில், பனியன் தொழில் மற்றும் பின்னலாடை தயாரிக்கும் தொழில் உள்ளிட்ட 24 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், புகையிலை தயாரிப்பு (பீடி சுற்றுதல்) தொழிலுக்கான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட ஊதியம், கைகளினால் காகிதம் தயாரிக்கும் தொழில் மற்றும் காகிதம் சார்ந்த செயல்முறை தொழில் ஆகியவற்றிற்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யும் பொருட்டு முதனிலை அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. சானிட்டரி நாப்கின்கள், மருத்துவ காஸ் பொருட்கள் மற்றும் மருத்துவத் துறையில் பயன்படும் துணிகள் தயாரித்தல்,

தரவு உள்ளீடு (அரசு நிறுவனங்கள் நீங்கலாக) ஆகிய தொழில்கள் குறைந்தபட்ச ஊதிய சட்ட அட்டவணை பகுதி I–இல் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம், இத்தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயனடைவார்கள்.

2024–2025–ஆம் நிதியாண்டில், 22,957 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 574 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு தொழிலாளர்களுக்கு ரூ.5,69,98,568/– வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

### 1.3.2.3. சம ஊதியச் சட்டம், 1976

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவதும், பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதும், சம ஊதியச் சட்டத்தின் நோக்கமாகும். பாலினத்தைப் பொருட்படுத்தாமல் ஒரே வேலை அல்லது ஒத்த இயல்புடைய வேலைக்கு சமமான ஊதியம்

வேலையளிப்பவரால் வழங்கப்பட வேண்டும். பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை தடுக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. 2024-2025-ஆம் நிதியாண்டில், பல்வேறு நிறுவனங்களில் 7,499 ஆய்வுகள் அமலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.3.2.4. மிகை ஊதியம் வழங்கல் சட்டம், 1965

பணியாளர்களுக்கு சட்டப்படியான மிகை ஊதியம் வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. குறிப்பிட்ட நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச மிகை ஊதியத்தை நிர்ணயிக்கிறது. 20 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களை பணியில் அமர்த்தும் நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

மிகை ஊதியம் பெற பணியாளர்களின் மாத ஊதியம் ரூ.21,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

மேலும், கணக்கியல் ஆண்டில் பணியாளர்கள் குறைந்தபட்சம் 30 நாட்கள் அந்நிறுவனத்தில் பணிபுரிந்து இருக்க வேண்டும். குறைந்தபட்ச மிகை ஊதியம் பெறுவது என்பது ஒரு பணியாளரின் சட்டபூர்வ உரிமையாகும். எந்த ஒரு கணக்கியல் ஆண்டிலும் அதிகபட்ச மிகை ஊதியம் என்பது உற்பத்தி திறனுடன் இணைக்கப்பட்ட மிகை ஊதியத்துடன் சேர்ந்து ஒரு பணியாளரின் ஊதியத்தில் 20 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கக் கூடாது.

### 1.3.3. வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல் தொடர்பான சட்டங்கள்

கடைகள், வணிக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்கள், பத்திரிக்கை நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிபுரிவதற்கேற்ற சூழலை முறைப்படுத்தவும்,

வலியுறுத்தவும் இச்சட்டங்கள் வழிவகை செய்கின்றன.

### 1.3.3.1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணிநிலைமைகள் குறித்து இச்சட்டம் விவரிக்கிறது. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்களின் பதிவு தொடர்பான சட்டப்பிரிவுகள், தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) சட்டம், 2018 மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு, 02.07.2024 முதல் அமலுக்கு வந்துள்ளது.

2024–2025–ஆம் நிதியாண்டில், இச்சட்டத்தின் கீழ், 24,117 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு முரண்பாடுகளுக்காக 6,789 வழக்குகள் இசைவு தீர்வு முறையில் முடிக்கப்பட்டு ரூ.23,32,550/– இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், வேலையளிப்பவர்களால் பணிநீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களது, மேல்முறையீட்டு மனுக்களை விசாரிக்கும் பொருட்டு, வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2024–2025–ஆம் நிதியாண்டில், 94 மேல்முறையீட்டு மனுக்கள் முடிக்கப்பட்டுள்ளன.

### 1.3.3.2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டத்தின் முதன்மையான நோக்கமானது, உணவகங்கள், உணவு விடுதிகள் உட்பட பல்வேறு உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பணிநிலைமைகளை முறைப்படுத்துவது ஆகும்.

2024-2025-ஆம் நிதியாண்டில், உணவு நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.2,50,44,975/- வசூலிக்கப்பட்டுள்ளது. 14,614 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இசைவு தீர்வு முறையில் 6,292 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.11,79,720/- இணைக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் பணிநீக்கம் தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை விசாரணை செய்து, உத்தரவு பிறப்பிக்கும் அலுவலர்களாக தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சமரசம்) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

### 1.3.3.3. மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961

மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்வது மோட்டார்

போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் முதன்மையான நோக்கமாகும்.

3,027 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, இந்நிறுவனங்களில் 1,39,730 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 2024-2025-ஆம் நிதியாண்டில், 990 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 270 வழக்குகள் இசைவு தீர்வு முறையில் முடிக்கப்பட்டு, இணக்கக் கட்டணமாக ரூ.88,100/- வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.3.3.4. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951**

தோட்ட நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் நலனைப் பேணவும், அவர்களின் பணிநிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், தோட்டத் தொழிலாளர் சட்டம் இயற்றப்பட்டது. 5 ஹெக்டேர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு மற்றும் 15 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள தேயிலை, காபி, ரப்பர்,

சின்கோனா மற்றும் ஏலக்காய் பயிரிடும் தோட்டங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

தமிழ்நாட்டில், தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்டங்கள்), உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், வால்பாறை, ஏற்காடு, வத்தலகுண்டு, நாகர்கோவில் மற்றும் உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்), உதகமண்டலம், நாகர்கோவில் ஆகியோர் தோட்டத் தொழிலாளர் சட்டத்தினை அமல்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டில், 2,232 தோட்ட நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் மொத்தப் பரப்பளவு 62,380 ஹெக்டேர் ஆகும். இதில் 699 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்கள் 54,894 ஹெக்டேர் பரப்பளவிலும், 1,533 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்கள் 7,486 ஹெக்டேர் பரப்பளவிலும் உள்ளன. தோட்ட நிறுவனங்களில் 21,151 ஆண்கள் மற்றும் 31,017

பெண்கள் என மொத்தம் 52,168 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

2024-2025-ஆம் நிதியாண்டில், 2,396 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முரண்பாடுகள் காணப்படும் இனங்களில், வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, தோட்ட நிறுவன வேலையளிப்பவர்களிடமிருந்து நீதிமன்றங்கள் மூலம் ரூ.2,03,000/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.3.5. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1966

பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், பீடி மற்றும் சுருட்டு உற்பத்தித் துறையில் உள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை நிர்வகிக்க ஒரு விரிவான ஒழுங்குமுறை கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சட்டம் பணியிடத்தில் தொழிலாளர்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் சட்டப்படியான உரிமைகளை

நிலைநிறுத்தி, அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்துகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், பீடி நிறுவனங்களில் 997 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 122 வழக்குகள் நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ளன.

**1.3.3.6. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955**

உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், செய்தித்தாள் நிறுவனங்களில் பணிபுரியும் உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பணியாளர்களின் பணி நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இச்சட்டம், பணியாளர்களின் வேலை நேரம் மற்றும் விடுப்பு குறித்து விவரிப்பதுடன், செய்தித்தாள் மற்றும் செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிக்கையாளர்கள்

மற்றும் பத்திரிக்கையாளர்கள் அல்லாதவர்களுக்கு ஊதியத்தை நிர்ணயம் செய்யவும், மறுநிர்ணயம் செய்யவும், ஊதிய வாரியங்களை அமைப்பதற்கும் வழிவகுக்கிறது.

**1.3.3.7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், 1958**

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறை நாட்கள்) சட்டம், தமிழ்நாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

2024–2025–ஆம் நிதியாண்டில், மேற்கொள்ளப்பட்ட 23,977 ஆய்வுகளில், 5,033 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, ரூ.30,41,750/– இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

### 1.3.3.8. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970

ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், சில சூழ்நிலைகளில் ஒப்பந்த தொழிலாளர் முறையினை நீக்குவதற்கும் ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் வழிவகை செய்கிறது. 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களை ஒப்பந்தத் தொழிலாளர்களாக பணியமர்த்தும் நிறுவனங்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும்.

2024–2025–ஆம் நிதியாண்டில், முதன்மை வேலையளிப்பவர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு முறையே 282 பதிவுச்சான்றிதழ்களும், 423 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.3.9. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979

மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்களின் பணிநிலைமைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதை இச்சட்டம் நோக்கமாக கொண்டுள்ளது. ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் தொழிலாளர்களை பணியமர்த்தும் நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு இந்த சட்டம் பொருந்தும். தமிழ்நாட்டில் பணிபுரியும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் விவரங்களைப் பதிவேற்றம் செய்திட இணையவழி தரவுதளம் (https://labour.tn.gov.in/ism/) உருவாக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தொழிலாளர்களின் விவரங்களை தொழிலாளர் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், மாவட்ட ஆட்சியர், முதன்மை

வேலையளிப்பவர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் ஆகியோர் இத்தளத்தில் பதிவேற்றம் செய்யலாம். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், நம்பிக்கையை வளர்க்கவும், சட்ட உரிமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், தொழிலாளர் ஆணையர் தலைமையில் மாநில அளவிலான புலம்பெயர்ந்த தொழிலாளர் ஆலோசனைக் குழுவும், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்களை தலைவர்களாகக் கொண்டு மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களையும் அரசு அமைத்துள்ளது.

2024–2025–ஆம் நிதியாண்டில், முதன்மை வேலையளிப்பவர் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு முறையே 42 பதிவுச்சான்றிதழ்களும் 40 உரிமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

### 1.3.4. தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதை தடை செய்தல் மற்றும் ஒழித்தல் தொடர்பான சட்டங்கள்

#### 1.3.4.1. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் (தடுத்தல் & முறைப்படுத்துதல்) சட்டம், 1986

குழந்தைகளை அனைத்துத் தொழில்களிலும், வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களிலும், செயல்முறைகளிலும் ஈடுபடுத்துவதை தடை செய்வதே இச்சட்டத்தின் நோக்கம் ஆகும். இதற்கென தமிழ்நாடு அரசு மாநில செயல் திட்டத்தையும், நிலையான இயக்க நடைமுறைகளையும் உருவாக்கியுள்ளது.

**அமலாக்கம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், தொடர்புடைய துறை அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு "மாவட்ட தடுப்புப் படை" இயங்கி வருகிறது. இக்குழுவினர் திடீராய்வுகளை மேற்கொள்கின்றனர்.

2024-2025-ஆம் நிதியாண்டில், 34,335 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 271 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, அதன் மூலமாக 60 குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் 283 வளரிளம் பருவத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். 119 வழக்குளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு, அபராதத் தொகையாக ரூ.20,01,250/- விதிக்கப்பட்டுள்ளது.

**மறுவாழ்வு**

மீட்கப்பட்ட குழந்தைகள், பள்ளிக் கல்வித் துறையால் நடத்தப்படும் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். குற்றம் நிரூபணம் செய்யப்பட்ட வழக்குகளில், தவறிழைத்த உரிமையாளர்களுக்கு நீதிமன்றங்களால் ரூ.20,000/- முதல் ரூ.50,000/- வரை அபராதமாக விதிக்கப்படுகிறது. நீதிமன்ற அபராதத் தொகையுடன், அரசின் பங்குத் தொகையாக ரூ.15,000/- சேர்த்து

மீட்கப்பட்ட குழந்தை / வளரிளம் பருவத் தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், மீட்கப்பட்ட 33 குழந்தைத் தொழிலாளர்களுக்கு அரசின் பங்குத் தொகையாக ரூ.4,95,000/– ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் "மாற்றம்" என்ற குறும்படம் 12.06.2024 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு விழா நூலக கருத்தரங்கில் நடைபெற்ற மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது வெளியிடப்பட்டது. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இக்குறும்படம் திரையரங்குகளிலும் திரையிடப்பட்டது. தகவல், கல்வி மற்றும் தொடர்பு

நடவடிக்கைகளின் (IEC) ஒரு அங்கமாக, மெட்ரோ இரயில்கள், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், சுங்கச் சாவடிகள் உள்ளிட்ட பொது இடங்களில் குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு சுவரொட்டிகள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

### 1.3.4.2. கொத்தடிமைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம், 1976

தமிழ்நாடு அரசு, கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை 2030–ஆம் ஆண்டுக்குள் ஒழிக்க உறுதி ஏற்று, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாவட்ட அளவிலான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் உபகோட்ட அளவிலான உபகோட்ட கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொத்தடிமைத் தொழிலாளர் முறையினை ஒழிக்க தமிழ்நாடு அரசு, மாநில செயல் திட்டம் மற்றும் நிலையான இயக்க நடைமுறைகளை உருவாக்கியுள்ளது. வாய்மொழியாக அல்லது எழுத்துப்பூர்வமாக புகார்கள் பெறப்படும் நேர்வில்,

தொடர்புடைய துறை அலுவலர்களைக் கொண்ட மீட்புக் குழு மீட்புப் பணிகளை மேற்கொள்கிறது. கொத்தடிமைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் வருவாய் கோட்டாட்சியர்களால் விடுதலைச் சான்று வழங்கப்படுகிறது. மீட்பு பணிக்குப் பின்னர் 24 மணி நேரத்திற்குள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய காவல் துறையினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மறுவாழ்வு**

மீட்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.30,000/– வழங்கப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், மீட்கப்பட்ட 120 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.35,90,000/– வழங்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் வழங்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழித்தல் குறித்த நான்கு தொகுதி பயிற்சிகளில், தொடர்புடைய துறைகளைச் சார்ந்த 128 அலுவலர்கள் பங்கேற்று பயனடைந்துள்ளனர். மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 10.02.2025 அன்று சென்னையில் மாநில அளவிலான கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**1.3.5. நுகர்வோர் பாதுகாப்பு சார்ந்த சட்டங்கள்**

சட்டமுறை எடையளவுகள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள் தொடர்பான தரநிலைகளை ஏற்படுத்திச் செயல்படுத்துவதன் மூலம் நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கிறது. இச்சட்டம் வணிகம் மற்றும் வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் தரநிலைகள்

துல்லியமாக இருப்பதை உறுதிசெய்கிறது, இதன் மூலம் நுகர்வோர் செலுத்தும் விலைக்கு ஏற்ற சரியான அளவை அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதத்தினை வழங்குகிறது. சட்டமுறை எடையளவுகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளின்படி, வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க பொட்டலமிடப்பட்ட பொருட்களின் மீது சட்டப்படியான அறிவிப்புகளை குறிப்பிட வேண்டியது அவசியமாகும். இவ்விதிமுறைகள், விற்பனையாளர்கள் அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு அதிகமாக விற்பனை செய்வதைத் தடுக்கிறது.

### 1.3.5.1. சட்டமுறை எடையளவுகள் சட்டம், 2009

சட்டமுறை எடையளவுகள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள் தொடர்பான தரங்கள், துல்லியமான அளவீடுகளை உறுதி செய்வதன் மூலம் நுகர்வோர் நலன்களைப் பாதுகாக்கிறது. இச்சட்டம்,

தவறான வர்த்தக நடைமுறைகளை தடுப்பதுடன், பரிவர்த்தனைகளில் நுகர்வோர் நம்பிக்கையை அதிகரிக்கிறது. மேலும், அளவீட்டு கருவிகளை தரப்படுத்துகிறது. இச்சட்டம் எடை / அளவு / எண்ணிக்கை அடிப்படையில் விற்பனை செய்யப்படும் அல்லது விநியோகிக்கப்படும் பொருட்களின் வணிகம் மற்றும் வர்த்தகத்தை நிர்வகிக்கிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், 36,322 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 6,947 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்றங்களால் அபராதமாக ரூ.76,17,200/– வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், முத்திரைக் கட்டணமாக ரூ.67,56,62,885/– மற்றும் உரிமக் கட்டணமாக ரூ.31,88,100/– பெறப்பட்டுள்ளது.

### 1.3.5.2. சட்டமுறை எடையளவுகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011

பொட்டலமிடப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு முன் அப்பொட்டலங்களின் மீது முக்கிய

சட்டப்பூர்வ அறிவிப்புகள் தெளிவாகக் குறிப்பிடப்படுவதை இவ்விதிகள் வலியுறுத்துகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், மொத்தம் 11,447 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 1,116 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, இணக்கக் கட்டணம் மற்றும் நீதிமன்றங்களால் அபராதமாக ரூ.60,24,000/– வசூலிக்கப்பட்டுள்ளது, மேலும், பொட்டலப் பொருட்கள் தயாரிப்பாளர்/ பொட்டலமிடுபவர்/ இறக்குமதியாளர் பதிவுக் கட்டணமாக ரூ.6,12,400/– பெறப்பட்டுள்ளது.

### 1.3.6. சமூக பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள்

அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வழங்குதல் ஆகியவை கீழ்க்காணும் சட்டங்கள் மூலம் அமல்படுத்தப்படுகிறது.

### 1.3.6.1. பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், பணியின்போதும், பணி நிமித்தமாகவும் ஏற்படும் விபத்தினால் எழும் இயலாமை அல்லது மரணத்திற்காக, பணியாளர்களுக்கோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கோ இழப்பீடு வழங்க வழிவகை செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்படும் கேட்பு மனுக்களை விசாரித்து உத்தரவு பிறப்பிக்க, வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள், பணியாளர் இழப்பீட்டு ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின் கீழ் உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்கள்/காப்பீட்டு நிறுவனங்களால், பணியாளர் இழப்பீட்டு ஆணையாளரிடம் வைப்பீடு செய்யப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், 2,119 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, இழப்பீட்டுத்

தொகையாக ரூ.89,61,63,241/– உத்தரவிடப்பட்டுள்ளது.

**1.3.6.2. பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972**

வேலையளிப்பவர்களிடமிருந்து பணிக்கொடை தொகையினை பணியாளர்கள் பெறும் வகையில் சட்டரீதியான திட்டத்தினை இச்சட்டம் வழங்குகிறது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களை வேலைக்கு அமர்த்தும் தோட்ட நிறுவனங்கள், தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும். ஒரு தொழிலாளர் 5 ஆண்டுகள் தொடர் பணி செய்திருந்தால், வயது முதிர்வு, பணி ஓய்வு, விருப்ப ஓய்வு, இறப்பு, விபத்து அல்லது நோய் காரணமாக இயலாமை ஏற்படுதல் ஆகிய காரணங்களுக்காக பணிக்கொடை பெறத் தகுதியுடையவர் ஆவார். இருப்பினும், மரணம் அல்லது இயலாமை காரணமாக

பணிமுறிவு ஏற்பட்டால், 5 ஆண்டுகள் தொடர் பணி முடித்திருக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. ஒரு பணியாளருக்கு அதிகபட்சமாக பணிக்கொடைத் தொகை ரூ.20 லட்சம் வரை வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ், வட்டார தொழிலாளர் இணை ஆணையர்களின் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் துணை ஆணையர்கள், கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2024–2025–ஆம் நிதியாண்டில், 2,368 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, பணிக்கொடைத் தொகையாக ரூ.16,95,66,342/– வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், 143 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

### 1.3.6.3. தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் மீதான விசாரணை நிலுவையில் உள்ள காலகட்டத்தில், அவர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க வழிவகை செய்வதன் மூலம் விசாரணை நிலுவையில் இருக்கும்போது, அவர்களுக்கு நிதி உதவி கிடைப்பதை உறுதி செய்கிறது.

இச்சட்டத்தின் கீழ், தொழிலாளர் இணை ஆணையர்கள் அலுவலக தொழிலாளர் துணை ஆணையர்கள் உரிய அதிகாரிகளாகவும், தொழிலாளர் இணை ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்–பட்டுள்ளனர். 2024–2025–ஆம் நிதியாண்டில், 90 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு பிழைப்பூதியமாக ரூ.94,42,233/– வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மேலும்,

35 மேல்முறையீட்டு மனுக்கள் விசாரித்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

**1.3.6.4. மகப்பேறு நலச் சட்டம், 1961**

பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறுக்கு முந்தைய மற்றும் பிந்தைய காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு மற்றும் மருத்துவ மிகை ஊதியம் உள்ளிட்ட மகப்பேறு நலன்கள் வழுங்கப்படுவதை இச்சட்டம் உறுதி செய்கிறது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் மகப்பேறு நலச் சட்டம் பொருந்தும். மகப்பேறு விடுப்பு காலமாக, பிரசவம் எதிர்நோக்கப்படும் காலத்திற்கு முன்னர் 8 வார காலத்திற்கு மிகாமலும், பிரசவத்திற்கு பின்னர் எஞ்சிய விடுப்பினையும் மொத்தமாக 26 வார காலத்திற்கு மிகாமல் துய்த்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி ஒரு பெண் ஊழியர் மகப்பேறு காலத்திற்கு முன்னதான 12 மாதங்களில் 80 நாட்கள் அந்த நிறுவனத்தில் பணிபுரிந்திருக்க வேண்டும். மேலும், 3 மாதத்திற்குள்ளான ஒரு குழந்தையை தத்தெடுக்கும் நேர்வில் அப்பெண் ஊழியர் மகப்பேறு விடுப்பாக 12 வாரங்கள் துய்க்க தகுதியுடையவராகிறார். 2024–2025–ஆம் நிதியாண்டில், 6,249 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 1.4. நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்

### 1.4.1. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம், 1972–ன் கீழ் அமைப்புசார்ந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார்

போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள், உணவு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக, தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் வேலையளிப்பவர்கள் ஆகியோரிடமிருந்து தொழிலாளர் நல நிதியை இவ்வாரியம் பெறுகிறது. மேற்கண்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் ஓர் ஆண்டிற்கு, ஒரு தொழிலாளியின் பங்காக ரூ.20/–, வேலையளிப்பவர்கள் பங்காக ரூ.40/– செலுத்துகிறார்கள். அரசு பங்காக ஒரு தொழிலாளிக்கு ரூ.20/– வீதம் பெறப்படுகிறது. மேலும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறியமைக்காக நிறுவனங்களின் மீது நீதிமன்றத்தால் விதிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் தொழிலாளர் துறையின் அமலாக்க அதிகாரிகளால் வசூலிக்கப்படும் இணக்கக்

கட்டணமும் வாரியத்திற்கு நிதி ஆதாரமாக பெறப்படுகிறது.

வாரியத்தின் வாயிலாக, மழலையர் பள்ளி முதல் பட்ட மேற்படிப்பு வரை கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, மூக்குக் கண்ணாடி உதவித்தொகை, பாடநூல் உதவித் தொகை, கல்வி ஊக்கத்தொகை, தையல் இயந்திரம் வாங்க உதவித் தொகை, அடிப்படை கணினி பயிற்சி உதவித்தொகை, 10 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள் மற்றும் பயிற்சி கையேடு இலவசமாக வழங்கல், உயர்கல்விக்கான நுழைவுத் தேர்வு உதவித் தொகை, மாவட்ட அளவிலான விளையாட்டு உதவித் தொகை, மாநில அளவிலான விளையாட்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர்களுக்கு குற்றாலம், மாமல்லபுரம், வால்பாறை ஆகிய இடங்களில் ஓய்வு இல்லங்கள்

மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்கு சென்னையில் தங்கும் இல்லம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், "உழைப்பவர் உலகம்" மாத இதழ் வெளியிடப்பட்டு வருகிறது.

2024–2025–ஆம் நிதியாண்டில், 10,788 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் ரூ.9.14 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ளனர்.

### 1.4.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்கள்

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்தல்) சட்டம், 1982 மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட திட்டங்கள் மூலம், இச்சட்டத்தின் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 54 வகை கட்டுமானத் தொழிலினங்கள் மற்றும் 71 வகை உடலுழைப்பு தொழிலினங்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு

சமூக பாதுகாப்பு மற்றும் நல உதவிகள் வழங்கப்படுகிறது.

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், முடக்க ஓய்வூதியம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் ஆகிய சமூக பாதுகாப்பு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கான சட்டத்தை இயற்றியதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் பின்வரும் 20 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது (அட்டவணை–1).

## அட்டவணை–1

| வ. எண். | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப் பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |

| வ. எண். | வாரியங்களின் பெயர் |
| --- | --- |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம் |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 17. | தமிழ்நாடு சமையல் மற்றும் உணவகத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 18. | தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம் |
| 19. | தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 20. | தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் (GIG) தொழிலாளர்கள் நல வாரியம் |

### 1.4.2.1. அமைப்புசாரா நல வாரியங்களின் செயல்பாடுகள்

அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனிற்காக வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் வாரியங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இந்நடைமுறையின் மூலம் அமைப்புசாரா தொழிலாளர்கள் அவர்களது இல்லத்திலிருந்தும், அருகில் உள்ள இணையதள சேவை மையங்களிலிருந்தும் பதிவு, புதுப்பித்தல் மற்றும் நலத்திட்ட உதவிகளுக்கு விண்ணப்பித்தல் ஆகிய சேவைகளை பெறும் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன.

### 1.4.2.2. அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 2024–2025–ஆம் நிதியாண்டில் பதிவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட விவரம்

அ) தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் 2024–2025–ஆம்

நிதியாண்டில், 4,79,355 தொழிலாளர்கள் பதிவு பெற்றுள்ளனர்.

ஆ) தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 2024–2025–ஆம் நிதியாண்டில், பதிவு செய்த பயனாளிகளுக்கு ரூ.930.82 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இ) பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களில் 4,51,073 தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,200/– ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகளுக்கான நலத்திட்ட உதவித் தொகைகள், ரிசர்வ் வங்கி மின்னணு பண பரிமாற்ற முறை (RECS) வாயிலாக, அவர்களது வங்கி கணக்குகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

## 2024–2025–ஆம் நிதியாண்டில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட விவரம்

## அட்டவணை–2

| வ. எண் | வாரியங்கள் | பதிவு பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட உதவித் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் | 3,41,804 | 617.17 |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் | 1,17,439 | 282.84 |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 20,112 | 30.81 |
| **மொத்தம்** | | **4,79,355** | **930.82** |

## அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்கள் துவங்கப்பட்ட நாள் முதல் வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம்

### அட்டவணை – 3

| வ. எண் | வாரியங்கள் | பதிவு பெற்ற தொழிலாளர்கள் | வழங்கப்பட்ட உதவித்தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் | 26,56,663 | 2377.28 |
| 2 | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் | 19,06,830 | 1949.57 |
| 3 | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் | 1,99,317 | 128.37 |
| **மொத்தம்** | | **47,62,810** | **4455.22** |

### 1.4.3. மாவட்ட கண்காணிப்புக் குழு

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, தொடர்புடைய அரசுத் துறை அலுவலர்களும், வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு, திட்ட செயலாக்கம் குறித்து விவாதித்து பதிவுபெற்ற தகுதியான அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு தாமதமின்றி சமூக பாதுகாப்பு நல உதவிகள் சென்றடைவதை உறுதி செய்கிறது.

பல்வேறு அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்ட விவரம் அட்டவணை 4—ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நலத்திட்ட உதவிகள் விவரம்

## அட்டவணை – 4

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | தனிநபர் விபத்து உதவி | | | |
| | அ) பணியிடத்து விபத்து (பதிவு பெறாத கட்டுமானத் தொழிலாளர்கள் உட்பட) | 5,00,000 | -- | -- |
| | ஆ) விபத்து மரண நிதி உதவி | 2,00,000 | 2,00,000 | 1,25,000<br>2,00,000*<br>*(தமிழ்நாடு பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நல வாரியம்) |
| | இ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப) | 1,00,000 வரை | 1,00,000 வரை | 1,00,000 வரை |
| 2. | இயற்கை மரண உதவித்தொகை | 50,000 | 50,000 | 30,000 |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | 5,000 | 5,000 | 5,000 |

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 4. | திருமண உதவித் தொகை<br>I) பெண்களுக்கு<br>II) ஆண்களுக்கு | <br><br>20,000<br>20,000 | <br><br>5,000<br>3,000 | <br><br>5,000<br>3,000 |
| 5. | மகப்பேறு உதவித் தொகை<br>மருத்துவ–ரீதியிலான கருச்சிதைவு / கருக்கலைப்பு | 18,000<br>3,000 | 18,000<br>3,000 | 6,000<br>3,000 |
| 6. | கல்வி உதவித் தொகை | | | |
| | அ) 6 முதல் 9ம் வகுப்பு வரை கல்வி பயில | 1,000 | 1,000 | 1,000 |
| | ஆ) 10ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 2,400 | 1,000 | 1,000 |
| | இ) 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் | 2,400 | 1,000 | 1,000 |
| | ஈ) 11ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 3,000 | 1,000 | 1,000 |
| | உ) 12ம் வகுப்பு பயில (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 3,000 | 1,500 | 1,500 |

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| | ஊ) 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் | 3,000 | 1,500 | 1,500 |
| | எ) முறையான இளநிலை பட்டப்படிப்பு / விடுதி வசதியுடன் | 4,000<br>– | 4,000<br>– | 1,500<br>1,750 |
| | ஏ) முறையான முதுநிலை பட்டப்படிப்பு / விடுதி வசதியுடன் | 4,000<br>5,000 | 4,000<br>5,000 | 4,000<br>5,000 |
| | ஐ) தொழில்நுட்ப பட்டப்படிப்பு / விடுதி வசதியுடன் | 4,000<br>6,000 | 4,000<br>6,000 | 4,000<br>6,000 |
| | ஒ) தொழில்நுட்ப பட்டமேற்படிப்பு / விடுதி வசதியுடன் | 6,000<br>8,000 | 6,000<br>8,000 | 6,000<br>8,000 |
| | ஓ) ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு / விடுதி வசதியுடன் | 3000<br>– | 3000<br>– | 1,000<br>1,200 |
| | ஔ) ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., எம்.பி.பி.எஸ். படிப்பு | 50,000 | -- | -- |

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| | கல்வி கட்டணம், தங்கும் விடுதி முழுக்கட்டணம் மற்றும் வாழ்க்கை செலவிற்காக (ஒவ்வொரு ஆண்டிற்கும்) | | | |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | 750 வரை | 750 வரை | 750 வரை |
| 8. | ஓய்வூதியம்/ முடக்க ஓய்வூதியம் (ஒவ்வொரு மாதமும்) | 1,200 | 1,200 | 1,200 |
| 9. | குடும்ப ஓய்வூதியம் | 500 | -- | -- |
| 10. | வீட்டு வசதி திட்டம் | 4,00,000 வரை | -- | -- |
| 11. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்கள் பணியிடத்தில் விபத்தினால் உயிரிழக்க நேரிட்டால் அவர்களின் | 1,00,000 வரை | -- | -- |

| வ. எண் | நலத் திட்டத்தின் பெயர் | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் தொகை (ரூ.) | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் இதர 17 நல வாரியங்கள் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| | உடலை சொந்த ஊருக்கு / மாநிலத்திற்கு எடுத்துச் செல்ல வழங்கப்படும் போக்குவரத்து உதவித்தொகை | | | |
| 12. | தீவிர நோய் பாதிப்பு நலத்திட்ட உதவித் தொகை (இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று சிகிச்சை, டயாலிசிஸ், புற்றுநோய், ஆஸ்துமா, சிலிக்கோசிஸ் மற்றும் பக்கவாதம்) | ஆண்டு ஒன்றுக்கு ரூ.12,000 வீதம் (மூன்று ஆண்டு-களுக்கு) | -- | -- |
| 13. | தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான விளையாட்டு போட்டிகளுக்கு ஊக்கத்தொகை, தேசிய அளவில் பன்னாட்டு அளவில் | 25,000<br>30,000 | 25,000<br>30,000 | 25,000<br>30,000 |

### 1.4.4. புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்கு மானியம்

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் மூலம் 1,000 பதிவு பெற்ற பெண்/ திருநங்கை ஓட்டுநர்களுக்கு மின்சாரம்/ CNG/ LPG–ஆல் இயங்கக்கூடிய புதிய ஆட்டோ ரிக்சா வாங்குவதற்கு ரூ.1,00,000/– மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தால், இதுவரை 320 பெண் ஓட்டுநர்கள் பயனடைந்துள்ளனர்.

### 1.4.5. நிதி ஆதாரம்

**தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம்**

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தால், கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியின் மொத்த கட்டுமான மதிப்பீட்டில் ஒரு சதவிகிதம் பங்களிப்பு தொகையாக பெறப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், ரூ.1020.28 கோடி பங்களிப்பு தொகையாக பெறப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம்**

போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்புத் துறையினால், பயணிகள் மற்றும் பொருட்களை சாலை வழியாக ஏற்றிச் செல்லும் மோட்டார் வாகனதாரர்களிடமிருந்து தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம், 1974–ன்படி வசூலிக்கப்படும் ஒரு சதவிகிதம் கூடுதல் வரி, இவ்வாரியத்திற்கான நிதி ஆதாரமாக பெறப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டிற்கு, ரூ.27 கோடி இவ்வாரியத்திற்கு நிதி ஆதாரமாக பெறப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் பிற 17 நல வாரியங்கள்**

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் மற்றும் பிற 17 நல வாரியங்களுக்கான நிதி தமிழ்நாடு அரசால் மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

2024–2025–ஆம் நிதியாண்டிற்கு, ரூ.285.70 கோடி இவ்வாரியங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

### 1.5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் (TILS)

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988–ஆம் ஆண்டிலிருந்து சங்கமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின் தலைவராவார். இக்கல்வி நிலையம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் சென்னை, அம்பத்தூரில் இயங்கும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும். தமிழ்நாடு அரசு இக்கல்வி நிலையத்திற்கு 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான மானியமாக ரூ.4.79 கோடி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், புது டெல்லி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் போன்றவற்றை தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், மற்றும் தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரக ஆய்வாளர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, உரிய கால இடைவெளிகளில் நடத்தி வருகிறது.

**கல்விப் பணிகள்**

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, ஒரு ஆராய்ச்சி நிறுவனமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையம், பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர்

மேலாண்மை), பகுதி நேர, முழு நேர, வார இறுதி வகுப்புகள் மற்றும் தொழிலாளர் மேலாண்மை குறித்த முனைவர் பட்ட படிப்புகளை நடத்தி வருகிறது. 2024–2025–ஆம் கல்வியாண்டில், 463 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

**வேலைவாய்ப்பு**

இக்கல்வி நிலையத்தின் மூலம் போதிய வேலை வாய்ப்புகளை தேடித்தரும் பொருட்டு "நியோ மானேஜர்ஸ் கைடன்ஸ் பீரோ" என்ற பணியமர்வு வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) படிக்கும் மாணவர்களுக்கான வளாகத் தேர்வு மற்றும் பணியில் அமர்த்துதல் ஆகியவற்றுக்கு இக்குழு ஏற்பாடு செய்கிறது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் அரசு/பொதுத்துறை/'தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

### 1.6. தமிழ்நாடு கட்டுமானக் கழகம் (TAC)

கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறன், ஆற்றல் மற்றும் அறிவு ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு கட்டுமானக் கழகம் 2012 –ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, தற்போது செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும் திறன்மிகு மையமாக அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது. இதில் 5,000 கட்டுமான தொழிலாளர்களுக்கு கட்டணமில்லா திறன் பயிற்சி மற்றும் திறன் தரம் உயர்த்துதல் பயிற்சி ரூ.5.86 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் தொழிலாளர்களுக்கு தங்குமிடம், உணவு உட்பட தினசரி ரூ.800/- வேலை இழப்பீட்டு தொகையாகவும் வழங்கப்படுகிறது.

## 1.7. தொழிலாளர் துறை சேவைகளை எளிமையாக்குதல்

தமிழ்நாடு தொழிலாளர் துறை தனது சேவைகளில் வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் எளிமையை மேம்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. நேர்மறையான தொழில் சூழலை ஊக்குவிக்கும் வகையில் தொழிலாளர் துறையில் இணையதள சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

தொழிலாளர் துறையின் வலைதளம் (https://labour.tn.gov.in), பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் சட்டமுறை எடையளவு சட்டம் ஆகியவற்றின் கீழ் பதிவு, உரிமம் மற்றும் புதுப்பித்தல் உள்ளிட்ட இணைய சேவைகளை வழங்கி வருகிறது. மேற்படி சேவை, வேலையளிப்பவர்கள், தொழிலாளர் நலச் சட்டங்களின் விதிமுறைகளை எளிதாகப் பின்பற்ற உதவுகிறது. இதுவரை, 38 மின்னணு சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு

கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு, தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு, சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் தயாரிப்பாளர், விற்பனையாளர், பழுதுபார்ப்பவர் ஆகியோர்களுக்கான உரிமங்கள் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## இணையதளம் வாயிலாக தாக்கல் செய்யப்படும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தனித்தனியே ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்வதை தவிர்த்திடவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையிலும், ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகளை காகிதமற்ற முறையில் வலைதளம் மூலம் தாக்கல் செய்யும் வசதி பின்வரும் சட்ட விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது:-

- தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959
- தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955
- தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965
- தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968

**ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்களை பராமரிக்கும் சிரமத்தினை குறைத்திடும் வகையில், எளிமையான ஒருங்கிணைந்த பதிவேடுகள் பின்வரும் சட்ட விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளது (அட்டவணை–5).

# அட்டவணை-5

<table>
<tr><td>1.</td><td>தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், 1948</td><td rowspan="3">17 பதிவேடுகள் ஒருங்கிணைக்-கப்பட்டு 4 பதிவேடுகளாக மாற்றப்-பட்டுள்ளது</td><td rowspan="3">ஒருங்கிணைந்த பதிவேடுகளின் பெயர்கள்.<br>1. வேலையாள் பதிவேடு<br>2. வேலை விவரங்கள் பதிவேடு<br>3. ஊதிய பதிவேடு<br>4. விடுப்பு மற்றும் சமூக பாதுகாப்பு பயன்கள் பதிவேடு</td></tr>
<tr><td>2.</td><td>தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் விதிகள், 1959</td></tr>
<tr><td>3.</td><td>தமிழ்நாடு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் விதிகள், 1965</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 4. | தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள், 1968 | 21 பதிவேடுகள் ஒருங்கிணைக்–கப்பட்டு 4 பதிவேடுகளாக மாற்றப்–பட்டுள்ளது | ஒருங்கிணைந்த பதிவேடுகளின் பெயர்கள்.<br>1. வேலையாள் பதிவேடு<br>2. வேலை விவரங்கள் பதிவேடு<br>3. ஊதிய பதிவேடு<br>4. விடுப்பு மற்றும் சமூக பாதுகாப்பு பயன்கள் பதிவேடு |
| 5. | தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர்கள் விதிகள், 1955 | | |

## 2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தமிழ்நாடு அதிக எண்ணிக்கையிலான பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளை கொண்டுள்ளதால், நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. இத்தொழிற்சாலைகளில் பல்வேறு வகையான உற்பத்தி முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழ்நாட்டின் அமைதியான தொழிற்சூழலால் பெரும் நிறுவனங்கள் ஈர்க்கப்பட்டு, வாகன உற்பத்தி, மின்னணு, பொறியியல், மருந்து பொருட்கள், ஜவுளி மற்றும் தோல் பொருட்கள் போன்ற பல்வேறு துறைகளில் அவற்றின் உற்பத்தி அலகுகளை நம் மாநிலத்தில் நிறுவியுள்ளன. திறன் மிகுந்த தொழிலாளர்கள் மற்றும் வலுவான உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டு தொழில் வளர்ச்சியில் நாட்டிலேயே ஒரு முன்னிலை வகிக்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்வதில் முக்கிய பங்குவகிக்கிறது.

தமிழ்நாட்டில், 31.03.2025 வரை தொழிற்சாலைகள் சட்டம், 1948–இன்கீழ் 52,614 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு, அத்தொழிற்சாலைகளில் 27,04,468 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். 2024–2025–ஆம் ஆண்டில் 2,540 புதிய தொழிற்சாலைகள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

31.03.2025 வரை 4,83,262 தொழிலாளர்கள் பணிபுரியும் 3,059 பதிவு செய்யப்பட்ட கட்டுமான நிறுவனங்களில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2024–2025–ஆம்

ஆண்டில் 1,501 கட்டுமான நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 2.1. நிர்வாக அமைப்பு

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு மற்றும் கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு ஆகிய இரண்டு பிரிவுகளுடன் செயல்படுகிறது. இவ்வியக்ககம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது.

### 2.1.1. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு

தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு 1 முதுநிலை கூடுதல் இயக்குநர், 6 கூடுதல் இயக்குநர்கள், 32 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்கள், 1 தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் 8 உதவி அறுவை

சிகிச்சை மருத்துவர்கள் ஆகிய அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது.

### 2.1.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு

கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு 1 முதுநிலை கூடுதல் இயக்குநர், 2 இணை இயக்குநர்கள், 8 துணை இயக்குநர்கள் மற்றும் 16 உதவி இயக்குநர்கள் ஆகிய அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது.

### 2.2. தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகள்

தொழிற்சாலைகள் சட்ட அமலாக்கப் பிரிவானது, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன் காக்கப்படுவதை உறுதி செய்வதுடன் கீழ்கண்ட பணிகளையும் மேற்கொண்டு வருகிறது:–

(I) தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 மற்றும் இதர தொழிலாளர் நலச் சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்.

(II) தொழிற்சாலைகளில் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் மேம்பாடு குறித்த செயல்பாடுகள்.

### 2.2.1. தொழிற்சாலைகளில் தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்தல்

தொழிற்சாலைகளில் இடர் அளவீட்டின் அடிப்படையில் காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் தொழிற்சாலைகளில் கீழ்கண்ட தொழிலாளர் நலச்சட்டங்கள் அமலாக்கம் செய்யப்படுகிறது:–

1. தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950
2. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975
3. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம், 1979 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983
4. சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937
5. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953

6. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994

7. மகப்பேறு நலச்சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967

8. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம், 1958 மற்றும் விதிகள், 1959

9. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981

10. சம ஊதியச்சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976

11. தமிழ்நாடு பிழைப்பூதியச் சட்டம், 1981 மற்றும் விதிகள், 1981

12. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம், 1972 மற்றும் விதிகள், 1973

13. தொழிலாளர் நலச்சட்டங்கள் (சில நிறுவனங்களுக்கு எளிமையாக்கப்பட்ட ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்) சட்டம், 1988

14. பணிக்கொடை பட்டுவாடா சட்டம், 1972 மற்றும் தமிழ்நாடு விதிகள் 1973

15. போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள், 1975

16. உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள், 1989

17. தமிழ்நாடு தொழிலக பெரும்விபத்து ஆபத்துகளை கட்டுப்படுத்தும் விதிகள், 1994

### 2.2.1.1. ஆய்வு முறை

ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும் விதமாக, "இடர் அளவீட்டின் அடிப்படையில் கணினி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வு முறை" அடிப்படையில் அலுவலர்களுக்கு இணைய வழியில் ஆய்வுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

வணிகம்புரிதலை எளிதாக்கும் வசதிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆய்வு முறைகளில் பின்வரும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன:–

(i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை/கட்டடம் அல்லது இதர கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலை/கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்தை

இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

(iii) அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கையானது ஆய்வு முடிந்த 24 மணி நேரத்திற்குள் துறைக்கும், சம்பந்தப்பட்ட தொழிற்சாலை/கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனத்திற்கும் சமர்பிக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் தொழிற்சாலைகள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(i) அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்**

அனைத்து பெருவிபத்து இடர் தரும் தொழிற்சாலைகள், 100 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 87 மற்றும் விதி 95ன் கீழ் வகைபடுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 2(cb)–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) "அதிக அபாயகரமான" தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

**(ii) நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள்**

100 தொழிலாளர்கள் வரை பணிபுரியும் அபாயகரமான தொழில்முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 87 மற்றும் விதி 95–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டவை) மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் (பிரிவு 2(cb)–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை)

மற்றும் 250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் அபாயகரமான தொழில்முறை மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை அல்லாத தொழிற்சாலைகள் "நடுத்தர அபாயகரமான" தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

**(iii) குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள்**

250–க்கும் குறைவான தொழிலாளர்கள் பணிபுரியும் அபாயகரமான தொழில்முறை (பிரிவு 87 மற்றும் விதி 95ன் கீழ் வகைப்படுத்தப்பட்டவை) அல்லாத மற்றும் ஊறுவிளைவிக்கும் செயல்முறை (பிரிவு 2(cb)–ன் அட்டவணையில் பட்டியலிடப்பட்டவை) அல்லாத தொழிற்சாலைகள் அனைத்தும் "குறைந்த அபாயகரமான" தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு

முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

2024–2025–ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில், 16,507 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

**2.2.1.2. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான ஆய்வு முறையில் திருத்தம்**

பட்டாசு தயாரிப்பில் உள்ள அபாயகரமான தன்மை மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ள அதிகமான விபத்துக்களை கருத்தில் கொண்டு, அரசாணை (நிலை) எண்.9, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எம்2) துறை, நாள்:31.01.2023–ன்படி அனைத்து பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளும் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளாது அதிக அபாயகரமான தொழிற்சாலைகள்

என வகைப்படுத்தப்பட்டு, முறை ஆய்வுகளின் கால அளவு ஆறு மாதத்திற்கு ஒரு முறை என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 2.2.1.3. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

**(i) சுயசான்றிதழ் திட்டம்**

250 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு நேரடி ஆய்விலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

### (ii) எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு பயனளிக்கும் விதமாக ஆண்டறிக்கையை தாக்கல் செய்யும் நடைமுறைகளை எளிமையாக்கவும், துரிதமாக்கவும், தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950–ன் விதி 100ன் படி தொழிற்சாலைகள், ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை, படிவம் எண்.22ல் சமர்ப்பிக்க வேண்டும். வெவ்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழான பல்வேறு விவரங்கள் ஒரே படிவத்தில் இணைய வழியாக சமர்ப்பிக்க வழிவகை செய்யப்பட்டு, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தனித்தனியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

### 2.2.2. அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், காலமுறை பரிசோதனைகளின் மூலம் தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்பாக செயல்படுவது உறுதி செய்யப்படுகிறது. இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ் வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வளிமண்டல அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனை மற்றும் ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனை அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனை அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நுண்ணொலி சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் 1,49,039 வெளிப்புற சோதனைகள், 1,473 உட்புற சோதனைகள், 21,021 நீரழுத்த சோதனைகள்

மற்றும் 9,333 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2.3. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்

தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 ஆகியவற்றின்படி, 14 வயது நிறைவடையாத குழந்தைகளை தொழிற்சாலைகளில் பணியமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை தடுக்கும் வகையில் காலமுறைப்படி தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் தொழிற்சாலைகள் மற்றும் சிறு நிறுவனங்களில் குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்படுவதை கண்டறிய வருவாய்துறை, காவல் துறை மற்றும் தொழிலாளர் துறை

அலுவலர்களுடன் இணைந்து குழு ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் 9,473 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 25 குழந்தை தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட வேலையளிப்போர் மீது 30 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.7,70,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுகளின்போது, இடர்தரும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகளில் 37 வளரிளம் பருவ தொழிலாளர்கள் கண்டறியப்பட்டு, வேலையளிப்போர் மீது 25 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் ரூ.3,80,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## 2.2.4. தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

### 2.2.4.1. பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

விபத்துகளை குறைக்கும் வகையில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள், மாதிரி ஒத்திகைகள் போன்ற பலவகையான பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்–படுகின்றன.

சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலைகள், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்கு காலமுறை அடிப்படையில் சென்று அத்தொழிற்சாலைகளில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை ஆய்வு செய்து, விபத்துக்கள் நிகழ்வதைத் தடுக்கும் வகையில், அத்தொழிற்சாலைகளில் நிலவும்

அபாயங்கள் குறித்தும் அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்து வருகின்றன.

2024–2025–ஆம் ஆண்டில் பாதுகாப்பு பிரச்சார குழுக்களால் 84 பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு, 3,725 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.2.4.2. பாதுகாப்பு பயிற்சி

தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் தொழிற்சாலை வளாகத்தில் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் 21,191 தொழிலாளர்கள் பயனடையும் வகையில் 353 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்பு கருத்தரங்குகள் மூலம் பாதுகாப்பு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தேசிய பாதுகாப்பு குழுமம் மற்றும் தேசிய உற்பத்திக்

குழுமம் போன்ற அரசுசாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து இவ்வியக்ககம் தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும், நேரடித் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

### 2.2.4.3. பயிற்சி பிரிவு

மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு உற்பத்தி செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பு பயிற்சி வழங்கும் பொருட்டு, விருதுநகரில் கூடுதல் இயக்குநர் தலைமையில் இயங்கி வந்த நடமாடும் கண்காணிப்புக்குழுவானது, பயிற்சி பிரிவாக மாற்றம் செய்யப்பட்டு, சென்னையில் கூடுதல் இயக்குநர் தலைமையில் ஒரு துணை இயக்குநர் பதவியுடன் இயங்கிவருகிறது. 2024–2025–ஆம் ஆண்டில் 39 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 2,383 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

### 2.2.4.4. உடல் நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தின் மருத்துவ பிரிவு ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி அறுவை சிசிச்சை மருத்துவர்களுடன் இயங்கி வருகிறது. இப்பிரிவு அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டு வருகின்றன. தொழில்வழி நோய்களிலிருந்து பாதுகாத்து கொள்ள அறிவுரைகள் மற்றும் இதர தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி வருகின்றன. தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவத் தொழிலாளர்களுக்கு மருத்துவ தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் ஆய்வுக் குழுவில் மருத்துவ அலுவலர்கள் இடம்பெறுகின்றனர்.

அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 2,07,911 தொழிலாளர்களுக்கும், உணவகங்களில் பணிபுரியும் 20,588 தொழிலாளர்களுக்கும் 16,500 வளரிளம் பருவ தொழிலாளர்களுக்கும் 2024–2025–ஆம் ஆண்டில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.2.5. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்**

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் அனைத்து இரசாயனங்களும், மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும், பாதுகாப்பிற்கும் ஊறுவிளைவிப்பதாக அமைந்துவிடும். எனவே, தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, பட்டாசு தொழிற்சாலைகள் காலமுறைதோறும் ஆய்வு செய்யப்படுகின்றன.

பாதுகாப்பினை உறுதி செய்வது மட்டுமல்லாமல் பாதுகாப்பான செயல்முறைகள் மற்றும் கையாளும் வழிமுறைகள் குறித்து பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் கற்றுத் தரப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் விதிமீறல்கள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது 784 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.1,37,25,500/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 2.2.5.1. பட்டாசு தொழிற்சாலைகளில் சிறப்பு குழுக்கள் மற்றும் தணிக்கைக்கான பணிக்குழு

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு மாநிலம் முழுவதும் சிறப்பு குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இச்சிறப்பு குழு ஆய்வுகளின் போது பட்டாசு தொழிற்சாலைகளில் அபாயகரமான பொருட்களை பாதுகாப்பாக சேமித்தல் மற்றும் கையாளப்படுதல் குறித்து கண்காணிக்கப்படுகிறது.

விதி மீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, கடும் விதிமீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளில் உற்பத்தி பணிகள் மேற்கொள்வதை தடை செய்து ஆணைகள் வழங்கப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் 1,477 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விபத்து நடைபெறும் இடங்களில் கூட்டுத் தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, அரசாணை (நிலை) எண் 94, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எம்2) துறை, நாள் 01.10.2024–ன்படி வருவாய்த்துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஆகிய பல்வேறு துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு, ஒரு பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. விபத்துக்கான காரணங்களை கண்டறிய இப்பணிக்குழுவால் விரிவான புலனாய்வு

மேற்கொள்ளப்படுகிறது. மேலும் உரிய விபத்து தடுப்பு முறைகள் சிறப்பாக செயல்படுத்தப்படுவது குறித்து இப்பணிக்குழுவால் ஆலோசனை வழங்கப்படுகிறது. இதன் விளைவாக, 2023–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 40.74 சதவீத விபத்துக்கள் 2024–ஆம் ஆண்டில் குறைந்துள்ளன. விபத்துக்களை குறைக்கும் விதமாக மேற்காணும் வழிமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன.

### 2.2.5.2. பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் முறையான கல்வி பெறாதவர்கள் என்பதாலும் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பான பணிமுறைகள் மற்றும் இரசாயனங்களின் தன்மை குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தாலும், பல கடும் மற்றும் மரண விபத்துக்கள் நிகழ்கின்றன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள்/

மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சிவகாசியில் பிரத்தியேகமாக ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி மையத்தில் கீழ்கண்ட பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன:–

- இரசாயனங்களின் கூறுகள்
- இரசாயனங்களை கையாளுதல்
- இரசாயனங்கள் கலவை
- இரசாயனங்களின் வேதி வினை
- பாதுகாப்பான செயல்முறைகள்

2024–2025–ஆம் ஆண்டில் இப்பயிற்சி மையத்தில் 35 குழுக்களுக்கு ஒரு வார கால பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் 458 மேற்பார்வையாளர்கள்/ ஃபோர்மேன்கள்

பயனடைந்துள்ளனர். மேலும் இரசாயனங்கள் கலத்தல் மற்றும் நிரப்புதல் பணி மற்றும் மணி மருந்து தயாரித்தல் ஆகிய பணிகளில் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த 68 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 843 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இப்பயிற்சி மையத்தின் மூலம் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பது மட்டுமல்லாமல், தொழிற்சாலை உரிமையாளர்கள், அவசரகால ஊர்தி ஓட்டுநர்கள், பணியாளர்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் வருவாய்த் துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் தொழிலாளர் துறை சார்ந்த அரசு அலுவலர்களுக்கும் பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 2.2.5.3. பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்தும் வகையில் தொழிற்சாலை வளாகத்தில் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளின்போது பட்டாசு உற்பத்தியின் போது தொழிலாளர்கள் கடைபிடிக்க வேண்டிய முக்கிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்படுகிறது.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், பட்டாசு தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு தனித்தனியாக பாதுகாப்பு காணொளிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பாதுகாப்பு காணொளிகளில் தொழிலாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் விற்பனையாளர்களது பொறுப்புகள் குறித்து விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து வசதிகளுடன் கூடிய பிரத்தியேக நடமாடும் பிரச்சார வாகனம் மூலமாக பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளில் பாதுகாப்பு காணொளிகள் திரையிடப்பட்டு தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. 2024–2025–ஆம் ஆண்டில் நடமாடும் பிரச்சார வாகனம் மூலம் 150 பாதுகாப்பு விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட்டு அதில் 5,230 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இச்செயல்பாடுகளுடன் கூடுதலாக பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை குறைத்திட தொழிலாளர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கும் பொருட்டு, மதுரை மண்டலத்தில் இணை இயக்குநர் (பதிவு) தலைமையில் ஒரு பாதுகாப்பு பிரச்சார குழு உருவாக்கப்பட்டுள்ளது.

### 2.2.5.4. தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு அரசால் தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஆண்டில் ஏதேனும் ஒரு நாளில் பணிபுரிந்துள்ள தொழிலாளர்களின் அதிகபட்ச எண்ணிக்கையோடு கூடுதலாக 10% எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் இக்காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட வேண்டும்.

அரசாணை (நிலை) எண் 93, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எம்2) துறை, நாள் 01.10.2024–ன்படி, 01.10.2024 முதல் மரண விபத்துக்கான காப்பீட்டுத் தொகை ரூ.50,000/–லிருந்து ரூ.5,00,000/– ஆக உயர்த்தி அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது, தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் காப்பீட்டுத்

திட்டமானது புதுப்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.2.5.5. பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளால் உயிரிழந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 10.11.2024 அன்று விருதுநகர் மாவட்டம் கூரைக்குண்டு கிராமத்தில் அறிவிக்கப்பட்டபடி, பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் உயிரிழந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உயர் கல்வி வரையிலான கல்வி உதவித் தொகை மற்றும் 18 வயது நிறைவடையும் வரை அவர்களுக்கான பராமரிப்பு செலவுத்தொகை வழங்கும்பொருட்டு, அரசாணை (நிலை) எண் 13, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எம்1) துறை, நாள் 12.02.2025–இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கென ஒரு தொகுப்புநிதி உருவாக்கப்பட்டு, முதற்கட்டமாக ரூ.5 கோடி

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.2.6. மாநில மற்றும் மாவட்ட தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு

தீ மற்றும் தொழிலகம் சார்ந்த விபத்துக்களை கூர்ந்தாய்வு செய்யவும், விபத்துகள் நிகழாமல் தடுப்பதற்கு உரிய தடுப்பு முறைகளை பரிந்துரைக்கவும், அரசாணை (நிலை) எண் 152, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எம்2) துறை, நாள் 03.10.2023–ன்படி, மாநில அளவிலான தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு மற்றும் மாவட்ட அளவிலான தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளன.

#### 2.2.6.1. மாநில தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு

தீ மற்றும் தொழிலகம் சார்ந்த விபத்துக்களை கூர்ந்தாய்வு செய்வதற்கு, அரசு தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக கொண்டு, மாநில

தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் இக்குழுவின் உறுப்பினர் செயலாளர் ஆவார்.

மாநில தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழுவின் கூட்டங்கள் 19.10.2023, 21.05.2024, 04.10.2024 மற்றும் 24.02.2025 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டுள்ளன. வருவாய்த்துறை, காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை மற்றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஆகிய பல்வேறு துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்–படுகின்றன. பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் மற்றும் எளிதில் தீப்பற்றக் கூடிய நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆய்வுகள் மேற்கொள்ள ஆய்வுக்குழுக்களால் கடைபிடிக்க வேண்டிய நிலையான இயக்க வழிமுறைகள் (Standard Operating

Procedures) வகுக்கப்பட்டுள்ளன. மேலும், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் ஆய்வுகள் மேற்கொள்வதற்கான சரிபார்ப்பு பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

### 2.2.6.2. மாவட்ட தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு

விபத்துகளை தவிர்க்கும் பொருட்டு, காலமுறைப்படி ஆய்வு செய்வதற்கும் பல்வேறு சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நடைமுறைகளை கடுமையாக அமலாக்கம் செய்வதை உறுதிசெய்வதற்காகவும், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மாவட்ட அளவிலான தீ மற்றும் தொழிலக பாதுகாப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் மாவட்ட குழுவின் உறுப்பினர் செயலாளர் ஆவார்.

01.07.2024 முதல் 31.03.2025 வரை பட்டாசு தொழிற்சாலைகளில் 3,046 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சட்டவிதிகளை மீறி செயல்பட்ட நிர்வாகத்தினர் மீது 741 காரணம் கோரும் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

### 2.2.7. இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள்

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்கள், அவற்றை சேமித்து வைக்கும்/கையாளும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும், உடல்நலத்திற்கும் ஊறுவிளைவிக்கக் கூடியதாகவும், சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடியதாகவும் இருப்பின், அத்தொழிற்சாலைகள் இடர்தரும் செயல்முறை கொண்ட தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம் 1948 (திருத்தப்பட்ட சட்டம், 1987)ன் பிரிவு 2(cb)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் சட்டம், 1948 (திருத்தப்பட்ட சட்டம், 1987)ன் பிரிவு 2(cb)ன், முதல் அட்டவணையில் 29 செயல்முறைகள், இடர்தரும் தொழில் செயல்முறைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

**2.2.7.1. பெருவிபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்**

உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஆபத்தான இரசாயனப் பொருட்கள் இறக்குமதி விதிகள், 1989–ன் அட்டவணை–3ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகபட்ச அளவுக்கு மேல் இரசாயனங்களை சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள், பெருவிபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 31.03.2025 அன்றைய நிலையில், தமிழ்நாட்டில் 180 தொழிற்சாலைகள் பெருவிபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சினைகளை சரியாக அளவீடு

செய்யும் பொருட்டு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் (Mock drill) காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் 117 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.2.7.2. மனை மதிப்பீட்டுக் குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு முன்னரோ அல்லது விரிவாக்கம் செய்வதற்கு முன்னரோ அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்கிட, தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன்(திருத்தப்பட்ட சட்டம், 1987) பிரிவு 41A–ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு 'மனை மதிப்பீட்டுக் குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதோடு,

பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணிசெயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயக்குவதற்கான வழிமுறைகள் குறித்து, இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது. 2024-2025-ஆம் ஆண்டில் மனை மதிப்பீட்டுக் குழுவால் 6 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.

### 2.2.8. பாதுகாப்பு விருதுகள் வழங்கும் திட்டம்

#### 2.2.8.1. மாநில பாதுகாப்பு விருதுகள்

விபத்து தடுப்பில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை மேம்படுத்தி, சிறந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி விபத்தில்லா நிலையை எட்டும் நோக்குடன் செயல்படும், தொழிற்சாலை நிர்வாகத்தினரை ஊக்குவித்து அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் விபத்துகளைக் குறைக்கும் விதமாக செயல்படும் பல்வேறு வகை தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

#### 2.2.8.2. உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்

தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் "தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்" வழங்கப்பட்டு வருகிறது.

### 2.3. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவின் செயல்பாடுகள்

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்)

சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் 2006–ன் கீழ் வரையறை செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம், அடிப்படை வசதிகள் மற்றும் நல வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதை கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு உறுதி செய்கிறது. சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வதோடு மட்டுமல்லாமல், கட்டுமான இடங்களில் பாதுகாப்பினை மேம்படுத்தி விபத்துக்களை குறைக்கும் நோக்கத்தோடு, கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்திட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது.

### 2.3.1 கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர் நலச் சட்டங்களை அமலாக்கம் செய்தல்

கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் காலமுறைப்படி முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சட்டவிதிகளை மீறும் நிறுவனங்களின் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் கீழ்கண்ட தொழிலாளர் நலச் சட்டங்கள் இவ்வியக்ககத்தால் அமலாக்கம் செய்யப்படுகிறது:–

1. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் 2006.

2. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1975.

3. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணிநிலைமைகள்) சட்டம் 1979, மற்றும் தமிழ்நாடு விதிகள், 1983.

4. சம்பளப்பட்டுவாடா சட்டம், 1936 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1937.

5. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1953.

6. குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1994.

7. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம், 1958 மற்றும் விதிகள், 1959.

8. சம ஊதியச் சட்டம், 1976 மற்றும் விதிகள், 1976.

9. போனஸ் வழங்கும் சட்டம், 1965 மற்றும் விதிகள், 1975.

10. மகப்பேறு நலச்சட்டம், 1961 மற்றும் தமிழ்நாடு விதிகள், 1967.

2024–2025–ஆம் ஆண்டில் கட்டடம் மற்றும் இதர கட்டுமானப் பணிகளில் 3,822 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுகளின் போது காணப்பட்ட முரண்பாடுகளுக்கு நிறுவனங்கள் மீது 227 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.9,54,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

### 2.3.1.1. ஆய்வு முறை

இடர் அளவீட்டின் அடிப்படையில் கட்டட மற்றும் இதர கட்டுமானப் பணியிடங்களில் காலமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கட்டுமான பணித்தன்மையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமானப் பணியிடங்கள் அதிக

அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**(i) அதிக அபாயகரமான கட்டுமானங்கள்**

500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் அனைத்து கட்டுமானங்கள் மற்றும் தொழிலாளர்கள் எண்ணிக்கை குறித்து வரையறை இல்லாமல் ஐந்து மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட அடுக்குமாடி கட்டடங்கள், அனைத்து இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமானப் பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

**(ii) நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்**

50 முதல் 500 தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும்

தொழிலாளர்கள் எண்ணிக்கை குறித்து வரையறை இல்லாமல் இரண்டுக்கு மேற்பட்ட ஐந்துக்கு குறைவான தளங்கள் கொண்ட கட்டடங்கள் ஆகியவை நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

**(iii) குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்**

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளன.

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் வருடத்திற்கு ஒருமுறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்படும்.

அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமானப் பணியிடங்களின் ஆய்வு அட்டவணை இணையவழியாக நிர்ணயம் செய்யப்படும்.

### 2.3.1.2. சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்

"சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்" பின்வரும் கட்டுமான நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:–

அ) நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்

ஆ) குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள குறைந்த அபாயகரமான கட்டுமான

நிறுவனங்களுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும். இருப்பினும் புகார், விபத்து அல்லது பிற அவசர நிகழ்வுகளின் போது தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் அனுமதியுடன் இத்தகைய கட்டடம் மற்றும் பிற கட்டுமானப் பணியிடங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

### 2.3.2. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு

கட்டுமானப் பணிகளில் அதிக அளவில் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவதாலும், அத்தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு விழிப்புணர்வு இல்லாத காரணத்தாலும் விபத்துகள் அதிகமாக ஏற்படும் சூழல் உள்ளது. எனவே,

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த கட்டுமானப் பணியிடங்களிலேயே பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. கட்டுமானப் பணிகளில் பணிபுரியும் வெளி மாநிலத் தொழிலாளர்களுக்கு முறையான கல்வியறிவு இல்லாததாலும், பாதுகாப்பான பணி முறைகள் குறித்து விழிப்புணர்வு இல்லாததாலும் அவர்களது தாய் மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 2024–2025–ஆம் ஆண்டில் 5,003 கட்டுமானத் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 95 பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

### 2.4. தொழில் முனைவோருக்கு வணிகம் புரிதலை எளிதாக்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்

தொழில் முனைவோருக்கு எளிதாக வணிகம் புரிதலை (Ease of Doing Business) ஊக்குவிக்கும் பொருட்டு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்திற்கென https://dish.tn.gov.in என்ற

பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் வழங்கப்படும் கீழ்கண்ட சட்டப்பூர்வமான ஒப்புதல்கள் இணையதளம் வழியாகவே இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) வழங்கும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது:–

- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.
- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.

- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.
- மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல்.
- கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996–ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல்.
- ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல்.

மூன்று தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் புதுப்பிக்கப்படும் உரிமங்களை இவ்வியக்கக வலைதளத்தின் வாயிலாக, உரிய கட்டணம் செலுத்திய பின்னர் நிர்வாகத்தினர் தானாகவே புதுப்பிக்கப்பட்ட உரிமங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | வழங்கப்படும் சேவைகளின் விவரம் | 2024–2025 ஆம் ஆண்டில் இணைய வழியாக வழங்கப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் புதிதாக பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட உரிமங்கள். | 2,540 |
| 2. | தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்கள். | 3,457 |
| 3. | ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றுகள். | 377 |
| 4. | ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் வழங்கப்பட்ட உரிமங்கள். | 1,266 |
| 5. | மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி | 726 |

| வ. எண். | வழங்கப்படும் சேவைகளின் விவரம் | 2024–2025 ஆம் ஆண்டில் இணைய வழியாக வழங்கப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| | முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றுகள். | |
| 6. | மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் வழங்கப்பட்ட உரிமங்கள். | 475 |
| 7. | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996–ன் கீழ் வழங்கப்பட்ட பதிவுச்சான்றுகள் | 2,264 |

## 2.5. சிறப்பு முன்னெடுப்புகள்

### 2.5.1. தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு குறும்படம் தயாரித்தல்

தொழிற்சாலைகளில் வரையறுக்கப்பட்ட இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கென "பள்ளம் தோண்டும் பணியில் பாதுகாப்பு", "பளு தூக்கும் இயந்திரங்களை இயக்கும் பணியில் பாதுகாப்பு" மற்றும் "உடையக் கூடிய கூரைப் பணியில் பாதுகாப்பு" ஆகிய குறும்படங்கள் தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் தயாரிக்கப்பட்டு, கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின் போது விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திரையிடப்படுகின்றன.

### 2.5.2. உற்பத்தி தொழிற்சாலைகளில் பயன்பாட்டில் உள்ள நவீன தொழில்நுட்ப யுத்திகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பயிற்சி அலுவலர்களுக்கு வழங்குதல்

தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலனைக் கருத்தில் கொண்டும், சட்ட அமலாக்கத்தினை திறம்பட மேம்படுத்திடவும், பல்வேறு தொழிற்சாலைகளில் சமீபகாலமாக உற்பத்திப் பணிகளில் செயல்படுத்தப்படும் நவீன புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்து, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

### 2.5.3. உயரமான இடங்களில் பாதுகாப்பாக பணிபுரிவது குறித்த பயிலரங்கம்

தொழிற்சாலைகளில் உயரமான இடங்களில் பணிபுரியும்போது பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து 21.11.2024 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் "உயரமான இடங்களில் பணிபுரிவதற்கான பாதுகாப்பு" குறித்த பயிலரங்கம்

நடைபெற்றது. இந்த பயிலரங்க துவக்கத்தின்போது மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் மற்றும் அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை ஆகியோர் கலந்து கொண்டு பணியிடப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்கள். இப்பயிலரங்கத்தில் "உயரமான இடங்களில் பணிபுரிவதற்கான பாதுகாப்பு" குறித்த கையேடு வெளியிடப்பட்டது. இப்பயிலரங்கின் மூலம் 150 தொழிற்சாலைகளை சார்ந்த 200 பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இதர நிர்வாக பிரதிநிதிகள் பயனடைந்தனர்.

### 2.5.4. கட்டுமான நிறுவனங்களுக்கு பொருந்தும் சட்ட விதிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

கட்டுமானப் பணிகளில் நிர்வாகத்தினரால் பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகள் தொடர்புடைய சட்ட விதிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, Builders Association of India

எனும் சங்கத்தின் பிரதிநிதிகளுக்காக, 29.01.2025 அன்று நடத்தப்பட்டது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியின் மூலம் 92 உறுப்பினர்கள் பயனடைந்தனர்.

### 2.5.5. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு புத்தாக்கப்பயிற்சி வழங்குதல்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இரசாயனங்களை பாதுகாப்பாக கையாளுதல் குறித்தும், பட்டாசு உற்பத்தியின் போது பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்தும், கூடுதலாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, புத்தாக்கப் பயிற்சி வழங்க அரசாணை (நிலை) எண். 109, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எம்2) துறை, நாள். 07.11.2024 மூலம் ஆணை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் 50 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 7,500 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## (வேலைவாய்ப்பு பிரிவு)

ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்பட்டுவரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்புகளை உறுதி செய்கின்றன. இம்மையங்கள் வாயிலாக இளைஞர்களுக்கு தகுந்த வேலைவாய்ப்பு பெறுவதற்கான சரியான வழிகாட்டல், ஆலோசனைகள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படுவதால் வேலைவாய்ப்பிற்கு தயார்படுத்தப்படுகின்றனர். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் அரசு / தனியார்துறை நிறுவனங்களுக்கும் இடையே இத்துறை ஒரு இடைமுகமாக செயல்பட்டு, அவர்கள் நீடித்த வேலைவாய்ப்பினை பெறுவதற்கு வழிவகை செய்கிறது. இத்துறையானது இளைஞர்களுக்கு

வழிகாட்டும் திட்டங்களை பின்வரும் ஐந்து அம்சக் கொள்கைகள் வழியாக நடைமுறைப்படுத்தி வருகிறது:–

1. அரசு வேலை பெற விரும்பும் வேலைநாடுநர்களுக்கு அவர்களது கல்வித்தகுதியினை பதிவு செய்தல், புதுப்பித்தல், கூடுதல் கல்வித் தகுதிகளை இற்றைப்படுத்துதல் மற்றும் அறிவிக்கப்படும் பணிக்காலியிடங்களுக்கு பரிந்துரைத்தல் ஆகிய பணிகளை வேலைவாய்ப்பு அலுவலக இணையதளம் வாயிலாக மேற்கொள்ளுதல்.
2. உயர்கல்வி, வேலைவாய்ப்பு வளங்கள் மற்றும் திறன் பயிற்சி ஆகியவை குறித்த தகவல்களை தொழில்நெறி வழிகாட்டும் மற்றும் ஆலோசனை அளிக்கும் நிகழ்ச்சிகள் வாயிலாக மாணவர்களுக்கு வழங்குதல்.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்,

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம், இரயில்வே தேர்வு வாரியம், பணியாளர் தேர்வு வாரியம் ஆகிய தேர்வு முகமைகளால் நடத்தப்படும் போட்டித்தேர்வுகளுக்கு சிறந்த வல்லுநர்களைக் கொண்டு பயிற்சி வகுப்புகளை நடத்துதல்.

4. தனியார்துறை வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாதந்தோறும் ஒரு சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமையும், வருடத்திற்கு இரண்டு மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களையும் நடத்துதல்.
5. தொழில்முனைவோராக்குதல் மற்றும் சுய வேலைவாய்ப்பு குறித்த தகவல்களை வழங்குதல்.

## 3.1 . வேலைவாய்ப்பு பிரிவின் நிர்வாக உட்கட்டமைப்பு


வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையானது இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. அவருக்கு உதவிபுரிய இயக்குநரகத்தில்

இரண்டு இணை இயக்குநர்கள்; இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) மற்றும் இணை இயக்குநர் (தொழில் நெறி வழிகாட்டுதல்), நான்கு துணை இயக்குநர்கள், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், மூன்று உதவி இயக்குநர்கள் மற்றும் ஐந்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு மண்டலங்கள், மண்டல இணை இயக்குநர்களின் நேரடி மேற்பார்வையில் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும்; சென்னை மற்றும் மதுரையில் தொழில்சார் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும்; வேலூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும்

தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும்; உதகமண்டலத்தில் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையமும்; சென்னையில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையமும்; மற்றும் சென்னையில் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமும் இயங்கி வருகின்றன.

நிர்வாக கட்டமைப்பு (வேலைவாய்ப்பு பிரிவு)



## 3.2. வேலைவாய்ப்புத் துறையின் முக்கிய செயல்பாடுகள்

- வேலைநாடுநர்களின் கல்வித் தகுதியை பதிவு செய்தல், புதுப்பித்தல், பதிவை இற்றைப்படுத்துல் ஆகியவற்றை www.tnvelaivaaippu.tn.gov.in இணையதளத்தின் வாயிலாக மேற்கொள்ளுதல்.
- அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணிக்காலியிட அறிவிப்புகளுக்கு தகுதியான மனுதாரர்களின் பட்டியலை www.tnvelaivaaippu.tn.gov.in இணையதளம் வாயிலாக தெரிவு செய்தல் மற்றும் பரிந்துரைத்தல்.
- மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.
- தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்.

- மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- 10 பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.
- www.tamilnaducareerservices.tn.gov.in மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் மென்பாடக் குறிப்புகளைப் பதிவேற்றம் செய்தல்.
- கல்வித் தொலைக்காட்சி வாயிலாக, கட்டணமில்லாப் பயிற்சி வகுப்புகளை ஒளிபரப்புதல்.
- மாவட்ட அளவிலான பெரிய மற்றும் சிறிய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துதல்.

- தனியார் துறை வேலைவாய்ப்பிற்கென www.tnprivatejobs.tn.gov.in தனியார் துறை வேலை இணையம் வழியாக சேவை வழங்குதல்.
- வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டம் வாயிலாக உதவித் தொகை வழங்குதல்.
- அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் வேலை நிலவரம் குறித்த தகவல்களை பெற்றுத் தொகுத்தல்.

**3.3. பதிவு, புதுப்பித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் இதர சேவைகளை www.tnvelaivaaippu.tn.gov.in இணையதளம் வாயிலாக வழங்குதல்**

வேலைவாய்ப்புத் துறையின் பணிகளுக்கென www.tnvelaivaaippu.tn.gov.in இணையமானது 15.09.2010 அன்று தொடங்கப்பட்டது. இவ்விணையதளம் வாயிலாக வேலைநாடுநர்களை

பதிவு செய்தல், பதிவைப் புதுப்பித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு வேலைநாடுநர்களைத் தெரிவு செய்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

| **உயிர் பதிவேட்டின் விவரங்கள் (வயது வாரியாக)** | **பதிவுதாரர்களின் எண்ணிக்கை (31.03.2025 தேதி நிலவரப்படி)** |
|---|---|
| 18 வயதிற்குட்பட்டோர் | 6,32,615 |
| 18 முதல் 25 வயது வரை | 7,58,639 |
| 26 முதல் 30 வயது வரை | 5,21,746 |
| 31 முதல் 35 வயது வரை | 4,48,750 |
| 36 முதல் 40 வயது வரை | 3,90,547 |
| 41 முதல் 45 வயது வரை | 2,59,678 |
| 46 முதல் 50 வயது வரை | 1,30,509 |
| 50 வயதிற்கு மேல் | 93,199 |
| மொத்தம் | 32,35,683 |

31.03.2025 அன்றைய நிலவரப்படி, வேலைவாய்ப்புத் துறையின் இணையதளத்தில் மொத்தம் 32,35,683 பதிவுதாரர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில், 17,80,297 ஆண்களும் 14,55,132 பெண்களும் மற்றும் 254 மாற்றுப் பாலினத்தவர்களும் உள்ளனர். இதில் 1,50,408 மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர்.

### 3.4. அரசு மற்றும் பொதுத் துறை பணிக்காலியிடங்களுக்கு பதிவுதாரர்களை பரிந்துரைத்தல்

வேலையளிப்போர் அளிக்கும் கேட்பு படிவத்தில் உள்ள பணிக்காலியிடங்களுக்கு, உயிர் பதிவேட்டில் உள்ள பதிவுதாரர்கள், அவர்களின் பதிவு மூப்பு, வயது, கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையில், விதிகளுக்குட்பட்டு இணையவழியாக தெரிவு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

## 3.5. மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்குதல்

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை விடுதிகள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும், பல்வேறு தொழில் வளங்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய தகவல்கள் வழங்கப்படுகின்றன.

2024-2025-ஆம் நிதியாண்டில், 3,906 தொழில்நெறி உரைகள் மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் நிகழ்த்தப்பட்டதில் மொத்தம் 3,65,616 மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

**3.6. கல்வி நிறுவனங்களில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்**

மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு கல்வி நிலையத்தில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு வருடத்திற்கொருமுறை நடத்தப்படுகின்றது. பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்களால் பல்வேறு புதிய தொழில் வாய்ப்புகள் பற்றிய விரிவுரைகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த கையேடுகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், விளக்கப்படங்கள் மூலமாகவும் பல்வேறு துறைகளின் வேலைவாய்ப்புகள் குறித்து காட்சிப்படுத்தப்படுகின்றன. இப்பணிக்கென ஒவ்வொரு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கும் ஆண்டொன்றிற்கு ரூ.25,000/- நிதிஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2024-2025-ஆம் நிதியாண்டில், 38 தொழில்நெறி வழிகாட்டும்

கண்காட்சிகள் நடத்தப்பட்டு, 10,986 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.7. அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டங்கள் மூலமாக போட்டித்தேர்வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

வேலைவாய்ப்பு துறையானது, தன்னார்வ பயிலும் வட்டங்கள் என்னும் முன்னோடித் திட்டத்தை 1999 முதல் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அமைத்து, போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு சேவை வழங்கி வருகின்றது. இத்தன்னார்வ பயிலும் வட்டங்கள் வாயிலாக, போட்டித் தேர்வு ஆர்வலர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

- போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள் கொண்ட நூலகங்கள்

- நுண்திறன் பலகையுடன் கூடிய அனைத்து வசதிகளும் கொண்ட வகுப்பறைகள்
- சிறந்த வல்லுநர்களைக் கொண்டு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- மாதிரித் தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்கள் நடத்துதல்

போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையில், ரூ.1.03 கோடி செலவில் அனைத்து அலுவலகங்களிலும் நுண்திறன் வகுப்பறை (வைஃபை மற்றும் ஸ்மார்ட் போர்டு) வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2024–2025–ஆம் நிதியாண்டில், 273 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 12,676 மாணவர்கள் பங்கேற்று, 1,719 மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளின் பல்வேறு நிலைகளில் தேர்ச்சிப் பெற்றுள்ளனர். இப்பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கென ஆண்டொன்றிற்கு ரூ.4.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 3.8. பத்து பல்கலைக்கழகங்களில் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துதல்

சென்னைப் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அன்னை தெரசா பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகிய பத்து பல்கலைக்கழகங்களின் கீழ் இயங்கி வரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.5.00 இலட்சம் என்ற வீதத்தில் ஆண்டுக்கு மொத்தம் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. 2024–2025–ஆம் நிதியாண்டில், 70 பயிற்சி

வகுப்புகள் நடத்தப்பட்டு, 3,750 மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.

### 3.9. மெய்நிகர் கற்றல் இணையதளம் www.tamilnaducareerservices.tn.gov.in

கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையிலும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் பயிற்சி வகுப்புகளில் நேரில் கலந்து கொள்ள முடியாத போட்டித் தேர்வு ஆர்வலர்களைச் சென்றடையவும், மெய்நிகர் கற்றல் இணையதளம் தொடங்கப்பட்டது. இந்த இணையதளத்தில் ஒலி/ஒளி வடிவில் அனைத்துப் போட்டித் தேர்வுகளுக்கான மென்பாடக்குறிப்புகள், அன்றாட மற்றும் மாத நடப்பு நிகழ்வுகள், பகுதித் தேர்வுகள் மற்றும் மாதிரித் தேர்வுகள் போன்றவை பதிவிறக்கம் செய்யக்கூடிய வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டித் தேர்வு ஆர்வலர்கள் இவ்விணையதளத்திலுள்ள மென்பாடக் குறிப்புகளை இலவசமாக பதிவிறக்கம் செய்து

கொள்ளலாம். இப்பாடக்குறிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. மாதிரித் தேர்வுத் தொகுதி மூலம் 04.02.2025 முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்–தொகுதி–1, தொகுதி–2, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த வங்கிப் பணியாளர் தேர்வு முகமை ஆகிய தேர்வுகளுக்கான மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட்டு, 1,450 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இவ்விணையதளத்தில் இதுவரை 3,80,383 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர், இதனில் 653 மென்பாடக்குறிப்புகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 94,21,225 நபர்கள் இவ்விணையதளத்தை பார்வையிட்டு, 41,99,173 முறை மென்பாடக்குறிப்புகளை பதிவிறக்கம் செய்துள்ளனர்.

### 3.10. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை "கல்வித் தொலைக்காட்சி" வாயிலாக ஒளிபரப்பு செய்தல்

பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் 20.03.2022 முதல் "கல்வித் தொலைக்காட்சி" வாயிலாக போட்டித் தேர்வு ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. இதற்கென வருடத்திற்கு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு அரசால் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி வகுப்புகள் அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் சிறப்பு நிகழ்ச்சிகளாக, ஆளுமை மேம்பாடு, ஊக்க உரைகள், கலந்துரையாடல், நடப்பு நிகழ்வுகள் மற்றும் கடந்த ஆண்டுகளின் வினாத்தாள்களின் பகுப்பாய்வுகள் ஆகியவை ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

இப்பயிற்சி வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் 9 மணி வரையும், மற்றும்

மறு ஒளிபரப்பு மாலை 7 மணி முதல் 9 மணி வரையும், ஒளிபரப்பு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தேர்வுகள், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தேர்வுகள், இரயில்வே தேர்வு வாரியத்தின் தேர்வுகள் மற்றும் பணியாளர் தேர்வு வாரியத்தின் தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளுக்கென இதுவரை 1,572 மணி நேரப் பயிற்சி வகுப்புகள் ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளன.

இதனில் 23.10.2024 முதல், புதிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளைச் சார்ந்த வல்லுநர்களின் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இந்த ஒளிபரப்பானது புதன் கிழமைகளில் காலை 8 மணி முதல் 9 மணி வரையிலும் மறு ஒளிபரப்பு இரவு 8 மணி முதல் 9 மணி வரையிலும் ஒளிபரப்பப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், பிளாக் செயின் டெக்னாலஜி, தரவு அறிவியல், மேக சேவையகக்

கணிப்பு, திறன் மேம்பாடு, கல்வித் தொழில்நுட்பம், இணையப் பாதுகாப்பு உள்ளிட்ட பதிவுகள் ஒளிபரப்பப்படுகின்றது. மேற்காணும் பதிவுகள் அனைத்தும் இத்துறையின் வலையொளி (YouTube) தளத்தில் ("TN Career Services Employment") பதிவிடப்பட்டுள்ளன. இத்தளமானது இதுவரை 1.83 இலட்சம் சந்தாதாரர்களைக் கொண்டுள்ளது.

**3.11. தனியார் துறை பணியமர்த்தம் – பெரிய மற்றும் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள்**

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உரிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காகவும், தனியார் துறைகளில் வளர்ந்து வரும் மனிதவள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், மாதம் ஒரு முறை சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமையும், வருடத்திற்கு இருமுறை பெரிய அளவிலான தனியார்

துறை வேலைவாய்ப்பு முகாம்களையும் நடத்தி வருகின்றன. தனியார் துறை நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான நபர்களைத் தெரிவு செய்வதற்கும், வேலைநாடுநர்கள் தங்களுக்குப் பொருத்தமான வேலையைத் தேர்ந்தெடுப்பதற்கும் இவ்வேலைவாய்ப்பு முகாம்கள் துணைபுரிகின்றன.

இத்தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களை சிறப்புடன் நடத்திட ஏதுவாக, ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கும் வருடத்திற்கு ரூ.8.00 இலட்சம் என மொத்தம் ரூ.3.04 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2024–2025–ஆம் நிதியாண்டில், 463 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 984 மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 47,314 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 3.12. தனியார் துறை வேலை இணையம்

www.tnprivatejobs.tn.gov.in

தனியார் துறையில் வேலைநாடுவோர்களுக்கு இணைய வழியாக சேவையை வழங்கும் நோக்கில், தனியார் துறை வேலை இணையம் உருவாக்கப்பட்டது. சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரிய தனியார் துறை நிறுவனங்கள் அனைத்தும், தங்கள் நிறுவனத்தின் காலிப்பணியிடங்களின் விவரங்களை இவ்விணையதளத்தில் பதிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். வேலைநாடுநர்கள் தங்களது கல்வித்தகுதிகளை இவ்விணையதளத்தில் பதிவு செய்கின்றனர். வேலையளிப்போர் தங்களுக்குத் தேவையான பொருத்தமான நபர்களைத் தேர்வு செய்வதற்கும், வேலைநாடுநர்கள் தங்களது கல்வித் தகுதி மற்றும் சம்பள எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு வேலைகளைத் தெரிவு செய்வதற்கும் இவ்விணையதளம் உதவி செய்கின்றது.

### தனியார் துறை வேலை இணையத்தின் புள்ளிவிவரங்கள்

| | |
|---|---|
| வேலைநாடுநர்களின் எண்ணிக்கை | 4,02,663 |
| வேலையளிப்போர்களின் எண்ணிக்கை | 8,950 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | 2,66,047 |
| பணி நியமனங்களின் எண்ணிக்கை | 32,072 |

## 3.13. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

தமிழ்நாட்டில் வேலூர், கோயம்புத்தூர், சேலம், திருவள்ளூர், உதகமண்டலம், விழுப்புரம், விருதுநகர், மதுரை, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தருமபுரி, நாகர்கோவில், திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, ஈரோடு, அரியலூர், கரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் 18 மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள், ஐந்தாண்டு தேசிய தொழில்நெறிப் பணிமுறை திட்டம் (National Career Service – Mission Mode Project) திட்டத்தின் கீழ் ரூ.9,34,54,026/- செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மையங்கள் தொழில்நெறி வழிகாட்டுதலின் மையமாக செயல்படுகின்றன. இம்மையங்கள் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல், வேலையளிப்போரை ஒருங்கிணைப்பு செய்தல், தொழில்நெறி ஆலோசனை வழங்குதல் போன்ற சேவைகளை அளித்து வருகின்றன. இம்மையங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றன.

### 3.14. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் அமையப் பெற்றுள்ளன. இம்மையங்கள் வாயிலாக தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை

வழங்கும் நிகழ்ச்சிகள், போட்டித் தேர்வுகளுக்கான முன் ஆட்சேர்ப்பு பயிற்சி வகுப்புகள் நடத்துதல், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் நடத்துதல் மற்றும் சுயதொழில் திட்டங்கள் குறித்த தகவல்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கும் இம்மையங்களுக்கு நேரில் வருகைபுரியும் குறிப்பிட்ட பதிவுதாரர்களுக்கும் இச்சேவைகள் வழங்கப்–படுகின்றன. 2024–2025–ஆம் நிதியாண்டில், இம்மையங்கள் வாயிலாக 32 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 760 மாணவர்கள் கலந்துக்கொண்டு பயனடைந்துள்ளனர். மேலும் 444 தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள் / தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சிகள் / தொழில்நெறி உரைகள் ஆகியவை நடத்தப்பட்டு 42,438 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.15. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் உதகமண்டலத்தில் செயல்பட்டு வருகின்றது. போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள்; பல்வேறு தொழில் வாய்ப்புகள், போட்டித் தேர்வுகள், திறன் பயிற்சிகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு ஆகியவை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவை பழங்குடியினர் நலப்பள்ளிகள் மற்றும் விடுதிகளில் நடத்தப்படுகின்றன. மேலும், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில், வேலைவாய்ப்பிற்கான உடனடி பதிவு முகாம்கள் நடத்தப்படுகின்றன. 2024–2025–ஆம் நிதியாண்டில், 15 தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளும் 63 தொழில்நெறி வழிகாட்டும் உரைகளும் வழங்கப்பட்டதில் 4,959 பதிவுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

## 3.16. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள்

மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களின் தேவையை பூர்த்தி செய்ய மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையமானது சென்னையில் செயல்பட்டு வருகின்றது. மேலும், அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இச்சிறப்பு பிரிவுகள் வாயிலாக மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்புகள், நலத்திட்டங்கள் மற்றும் திறன் பயிற்சித் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதோடு, மாற்றுத்திறனாளிகளை தனியார் துறை நிறுவனங்களில் பணியமர்த்த சிறப்பு

முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரிவுகள் வாயிலாக அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பற்றோர்–களுக்கான உதவித்தொகை வழங்கப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், சென்னையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடத்தப்பட்ட பயிற்சி வகுப்புகளில் 129 மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர்.

### 3.17. மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையமானது சென்னையில் தொடங்கப்பட்டு, இளைஞர்களுக்கு உள அளவியல் சோதனைகள் மற்றும் தனிப்பட்ட ஆலோசனை வழங்குதல் மூலம் இளைஞர்கள் தங்களுக்கு பொருத்தமான தொழில் முடிவுகளை எடுப்பதற்கு உதவிபுரிகின்றது. மேலும், போட்டித்

தேர்வு ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு தொழில்கள் மற்றும் அவற்றிலுள்ள வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு வழங்கும் வகையில் தொழில்நெறி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

2024–2025ஆம் நிதியாண்டில், இம்மையத்தில் மட்டும் 10 சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 402 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இவர்களில், 65 மாணவர்கள் பல்வேறு போட்டித்தேர்வுகளின் வெவ்வேறு நிலைகளில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் 1,276 மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கு உள அளவியல் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

### 3.18. வேலை நிலவரத் தகவல்

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களிலும், வேலை

நிலவரத் தகவல் அலகு இயங்கி வருகிறது. கட்டாய காலிப்பணியிட அறிவிப்பு சட்டம், 1959–ன்படி அரசு/பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் 25 நபர்களுக்கு மேல் பணிபுரியும் வேளாண்மைசாரா தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் வேலை நிலவரத் தகவல்கள் காலாண்டிற்கு ஒரு முறை பெற்றுத் தொகுக்கப்படுகின்றன.

ஒவ்வொரு நிறுவனத்திலும் உள்ள பல்வேறு வேலைகள் குறித்த விவரங்கள், பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களின் கல்வித்தகுதி உள்ளிட்ட வேலை நிலவரத் தகவல்கள் மாவட்ட அளவில் தொகுக்கப்பட்டு அவ்விவரங்களின் அடிப்படையில், மனிதவள இருப்பு மற்றும் தேவை குறித்து மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## 3.19. தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரம்

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து, ஜூலை மாதம் இரண்டாவது வாரத்தினை தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் வாரமாக கொண்டாடி வருகின்றன.

இக்காலக்கட்டத்தில் தொழில்நெறி ஆலோசனைகள், தொழில்நெறி உரைகள் மற்றும் பல்வேறு தொழில்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகள், திறன் விழிப்புணர்வு மற்றும் முன்கற்றல் திறனை அங்கீகரித்தல் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மேலும் திறன் போட்டிகள், வினாடி வினா போட்டிகளுடன், பெண்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தோருக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

## 3.20. "திறன் தமிழகம்" இதழ் மற்றும் இதர வெளியீடுகள்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் அனைத்து செயல்பாடுகளையும் விளக்கும் வண்ணம் "திறன் தமிழகம்" என்னும் காலாண்டு இதழ் வெளியிடப்படுகிறது. இதுவரை "திறன் தமிழகம்" இதழின் 29 பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும் பின்வரும் தலைப்புகளில் தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன:–

- தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டி கையேடு.
- தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டி கையேடு.
- பன்னிரெண்டாம் வகுப்பிற்குப்பின் மருத்துவம் மற்றும் மருத்துவ அறிவியல் சார்ந்த படிப்புகள்.
- முதல் தர உயர்கல்வி நிறுவனங்கள் வழங்கும் முதுநிலை பட்டயப் படிப்புகள்.

மேற்காணும் கையேடுகள் அனைத்தும் வேலைவாய்ப்பு துறையின் www.tnvelaivaaippu.tn.gov.in

இணையதளத்தில் மின் புத்தக வடிவில் வெளியிடப்பட்டுள்ளன.

### 3.21. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத்திட்டம்

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டமானது 2006–இல் தொடங்கப்பட்டு மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பதிவு செய்து, குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் உயிர் பதிவேட்டில் உள்ள பதிவுதாரர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு இவ்வுதவித்தொகை வழங்கப்படுகின்றது. இதனை பெறுவதற்கு மனுதாரர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்குள் இருக்க வேண்டும். மேலும் இதற்கான உச்ச வயது வரம்பு, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு 45–ஆகவும்,

இதர பிரிவினருக்கு 40–ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெறாத பயனாளிகளுக்கு மாதம் ரூ.200/–ம், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.300/–ம், மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.400/–ம் மற்றும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.600/–ம் உதவித்தொகையாக காலாண்டுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், 15,203 பயனாளிகளுக்கு உதவித்தொகையாக மொத்தம் ரூ.10.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3.22. அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை திட்டம்**

அனைத்து வகை மாற்றுத்திறனாளி வேலைநாடுநர்களுக்கும் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இந்தத்

திட்டத்தில் பயன்பெற குறைந்தபட்சம் ஒரு வருடம் உயிர் பதிவேட்டில் இருந்தால் போதுமானது. மேலும் பெற்றோரின் வருமானம் மற்றும் உதவித்தொகை பெறுவதற்கான வயதில் உச்சவரம்பு ஏதும் இல்லை. இவ்வுதவித்தொகையானது தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதியானது மாற்றுத்திறனாளிகள் நலத் துறையால் வழங்கப்பட்டு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எழுத்தறிவு இல்லாதவர்கள் முதல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி வரை உள்ள பயனாளிகளுக்கு மாதம் ரூ.600/–ம், மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூ.750/–ம் மற்றும் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.1,000/–ம் உதவித்தொகையாக மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2024–2025–ஆம் நிதியாண்டில், 2,542 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.76 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

## (பயிற்சிப் பிரிவு)

**"திறன் பயிற்சி என்பது இளைஞர்கள், தொழிற்சாலைகள் மற்றும் நாடுகளின் முன்னேற்றத்திற்கு ஒரு காரணியாக உள்ளது."**

தொழில்நுட்பங்களின் வளர்ச்சி, நிறுவனங்களின் முன்னேற்றம் மற்றும் வளரும் பொருளாதாரம் ஆகியவற்றினால் திறன் பெற்ற மனிதவள தேவை பன்மடங்கு அதிகரித்து வருகிறது. இம்மாற்றங்களுக்கேற்ப திறமையான மனித வளம் மற்றும் தொழிற்சாலைகளில் அதிகரித்து வரும் மனிதவளத் தேவை ஆகியவற்றின் இடைவெளியினை குறைத்திட மேம்படுத்தப்பட்ட படிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை தொழிற்பயிற்சி நிலையங்களில் உருவாக்கிடுதல் இன்றியமையாததாகும்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சிகள், மாணவர்களுக்கு

செய்முறை அறிவு, தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தொழில்சார் திறன்களை வளர்த்திட முக்கிய தளமாக செயல்படுகின்றன. இதனை மேலும் வலுப்படுத்த, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தற்போது தொகுப்பு அடிப்படையிலான கற்றல், நவீன தொழில் 4.0 ஆய்வகங்கள், வேலைவாய்ப்பு முகாம், டிஜிட்டல் கற்றல் தொகுதிகள், முன்னோடி மென்பொருள்சார் கருவிகள் மற்றும் சிறந்த கல்வி–தொழில்துறை கூட்டாண்மை ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. திறன் மேம்பாட்டின் முக்கியத்துவம் அதிகரித்து வரும் நிலையில், இத்துறையின் பயிற்சி பிரிவில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள் இளைஞர்களுக்கு நீண்டகால திறன் பயிற்சிகள் வழங்கி, தொழில்துறைகளின் மாறிவரும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அவர்களை திறமையானவர்களாக உருவாக்கி வருகின்றன.

### 3.23. துறையின் கட்டமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் இத்துறையின் தலைவராவார். தலைமையகத்தில் இயக்குநருக்கு உதவியாக கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி) மற்றும் கூடுதல் இயக்குநர் (தொழிற்பழகுநர் பயிற்சி) ஆகிய இரண்டு கூடுதல் இயக்குநர்கள் உள்ளனர். மண்டல அளவில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் 7 மண்டல பயிற்சி இணை இயக்குநர்கள் செயல்பட்டு வருகின்றனர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் முதல்வர்கள் தலைமையிலும், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகங்கள் உதவி இயக்குநர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன.

இத்துறையால் செயல்படுத்தப்படும் முக்கிய திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்:–

(1) கைவினைஞர் பயிற்சித் திட்டம் (Craftsmen Training Scheme)

(2) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக செயல்படுத்துதல் (Transformation of Government ITIs as Industry 4.0 Technology Centres)

**(3)** தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம் (Apprenticeship Training Scheme)

**(4)** தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS)

**(5)** தொழிற் பள்ளி (Industrial School)

(6) பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு திட்டத்தின்கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல் (Public Private Partnership)

**3.24. கைவினைஞர் பயிற்சித் திட்டம் (CTS)**

கைவினைஞர் பயிற்சித் திட்டம் கைவினைஞர்களை உருவாக்கும் வகையில் தொழிற்பயிற்சித் துறையில் முக்கிய பங்கு வகிக்கிறது. தொழிற்சாலைகளின் திறன் பெற்ற

தொழிலாளர்களின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் நீண்டகால பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொழிற் பயிற்சி 70% செய்முறை மற்றும் 30% கருத்தியல் பாடங்களை உள்ளடக்கியதாகும்.

### 3.24.1. அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் ஒருங்கிணைந்த திறன் பயிற்சி

தமிழ்நாட்டில் 113 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், 56 பொறியியல் மற்றும் 23 பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் நீண்ட கால திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் வழக்கமான தொழிற்பிரிவுகளான வெல்டர், டர்னர், பிட்டர், மெக்கானிக் மோட்டார் வெஹிக்கிள், பிளம்பர் மற்றும் நவீன கால தொழிற்பிரிவுகளான பவர் எலக்ட்ரானிக்ஸ், ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டண்ட், டெக்னீசியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ஆப்பரேட்டர் அட்வான்ஸ்டு மிஷின் டூல்ஸ், ஃபயர்

டெக்னாலஜி மற்றும் இன்டஸ்டிரியல் ஸேப்டி மேனேஜ்மென்ட் உட்பட பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிற்பிரிவுகளுக்கு தகுந்தாற்போல் பயிற்சி காலமானது 6 மாதங்கள் முதல் 2 ஆண்டுகள் வரை உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஜுலை / ஆகஸ்ட் மாதங்களில் URL: www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் மாநில அளவிலான இணையவழி கலந்தாய்வு மூலம் அரசின் இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி தகுதியின் அடிப்படையில் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. மாணவர்கள் தங்கள் விருப்பப்படி தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினை தேர்வு செய்து கொள்ளலாம்.

2024–ஆம் ஆண்டில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 29,770 மாணவர்கள் சேர்ந்து 93.26% சேர்க்கை நடைபெற்றுள்ளது. சென்ற ஆண்டு

அறிவிக்கப்பட்ட புதிய 11 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 1,356 கூடுதல் இருக்கைகளுடன் 18.12.2024 அன்று தொடங்கப்பட்டுள்ளன.

### 3.25. சமூக பங்களிப்பை ஊக்குவிக்க திறன் பயிற்சி

#### 3.25.1. ஆதிதிராவிட மாணவர்களுக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

இம்மாநிலத்தில் பட்டியலின மாணவர்களின் சமூக அந்தஸ்தை மேம்படுத்தும் பொருட்டு வடகரை மற்றும் சிதம்பரம் ஆகிய இடங்களில் 356 இருக்கைகளுடன் இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 356 மாணவர்கள் 2024ஆம் ஆண்டு சேர்க்கை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவை நீங்கலாக ஏனைய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 18 சதவீத இடங்கள் பட்டியலின மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 2024ஆம் ஆண்டில், மொத்தம் 9,865 பட்டியலின மாணவர்கள்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர், இது மொத்த மாணவர்களில் 32.37 % ஆகும்.

### 3.25.2. பழங்குடியின மாணவர்களுக்கான அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

சமூகத்தில் நலிவடைந்த பழங்குடியினர் இனத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் 6 அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் சங்கராபுரம், ஆனைக்கட்டி, கருமந்துறை, ஜமுனாமரத்தூர், கொல்லிமலை மற்றும் கூடலூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இந்த 6 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 490 மாணவர்கள் 2024ஆம் ஆண்டு சேர்ந்துள்ளனர்.

இவை நீங்கலாக ஏனைய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 1% இடங்கள் பழங்குடியின மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன. 2024ஆம்

ஆண்டு மொத்தம் 1,466 பழங்குடியின மாணவர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்துள்ளனர். இது மொத்த மாணவர்களில் 4.8 % ஆகும்.

### 3.25.3. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

பாதிக்கப்பட்ட பிரிவினரிடையே சமத்துவத்தை வளர்க்கும் பொருட்டு கிண்டி, உளுந்தூர்பேட்டை மற்றும் நாகர்கோவில் ஆகிய 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்துநர் பிரிவில் காது கேளாதோர் மற்றும் வாய்பேச இயலாத மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 43 மாணவர்கள் 2024ஆம் ஆண்டு சேர்ந்துள்ளனர்.

இவை நீங்கலாக ஏனைய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 5% இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 2024ஆம்

ஆண்டில் மொத்தம் 140 மாற்றுத்திறனாளிகள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்துள்ளனர்.

### 3.25.4. மகளிருக்கென பிரத்யேகமாக இயங்கும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள்

மாணவிகளை தொழிற்பயிற்சி பெற ஊக்குவிப்பதற்காக 10 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும், நான்கு மகளிர் பிரிவுகளிலும் பயிற்சி பெறுவதற்காக 2,844 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 2024ஆம் ஆண்டு சேர்க்கை செய்யப்பட்டுள்ள மாணவிகளின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்–பட்ட இடங்கள் | சேர்க்கப்–பட்ட மாணவிகள் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை | கிண்டி | 280 | 245 |
| 2. | சென்னை | அம்பத்தூர் | 160 | 144 |
| 3. | தேனி | ஆண்டிபட்டி | 208 | 208 |
| 4. | திண்டுக்கல் | திண்டுக்கல் | 264 | 264 |
| 5. | மதுரை | மதுரை | 232 | 232 |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 304 | 272 |
| 7. | சேலம் | சேலம் | 260 | 260 |

| வ. எண். | மாவட்டம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒப்பளிக்கப்–பட்ட இடங்கள் | சேர்க்கப்–பட்ட மாணவிகள் |
|---|---|---|---|---|
| 8. | கன்னியாகுமரி | நாகர்கோவில் | 228 | 228 |
| 9. | கடலூர் | கடலூர் | 320 | 320 |
| 10. | திருச்சிராப்பள்ளி | புள்ளம்பாடி | 316 | 251 |
| **பெண்கள் பிரிவு** | | | | |
| 11. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 88 | 82 |
| 12. | கிருஷ்ணகிரி | ஓசூர் | 24 | 24 |
| 13. | கரூர் | கரூர் | 88 | 88 |
| 14. | நாமக்கல் | நாமக்கல் | 72 | 72 |
| | | **மொத்தம்** | **2,844** | **2,690** |

இவை நீங்கலாக ஏனைய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 30 சதவீத இடங்கள் மாணவிகளுக்கு ஒதுக்கப்பட்டு, 2024ஆம் ஆண்டில் மொத்தம் 5,175 மாணவியர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 3.25.5. சிறைக் கைதிகளுக்கு அரசு தொழிற் பயிற்சி நிலையம்

சிறைவாசிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மத்திய

சிறையில் 5 தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் 2024ஆம் ஆண்டில் 168 ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகளில் 168 சிறைவாசிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 3.26. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு அரசு உதவி

மாநிலத்தில் திறன்பெற்ற தொழிலாளர்களை அதிகரிக்கவும், நீண்ட கால திறன் பயிற்சி பெற இளைஞர்களை ஊக்குவிப்பதற்கும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன: –

- கட்டணமில்லா பயிற்சி
- பேருந்து பயணச் சலுகை
- தையல் கட்டணத்துடன் 2 இணை சீருடைகள் மற்றும் 1 இணை காலணி

- மாதம் ரூ.750/– உதவித்தொகை
- தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பெண் பயிற்சியாளர்களுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் ரூ.1,000/– கூடுதல் உதவி தொகை
- தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் ஆண் பயிற்சியாளர்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் கூடுதலாக மாதம் ரூ.1,000/– உதவித் தொகை
- தமிழ் மொழியில் பாடப் புத்தகங்கள்
- வரைபடக் கருவிகள்
- மிதிவண்டி
- செய்முறை பயிற்சிக்கான மூலப்பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள்

### 3.27. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக செயல்படுத்துதல்

தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளை அறிமுகப்–படுத்தியதின் மூலம் இளைஞர்கள் எதிர்காலத்திற்கு

ஏற்ற திறன்களை பெற வழிவகுக்கிறது. இப்புதிய தொழிற்பிரிவுகள் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கு ஏற்பவும், நவீன தொழிற்சாலைகளுக்கு ஏற்பவும் வடிவமைக்கப் பட்டுள்ளன. இது தேசிய மற்றும் உலகளாவிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதுடன் வேலைவாய்ப்பு, புது முயற்சிகள் மற்றும் தொழில்துறை வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

71 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 7,672 கூடுதல் இருக்கைகளுடன் கூடிய கீழ்கண்ட தொழில் 4.0 தரத்திலான தொழிற் பிரிவுகள் ரூ.2877.43 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்–பட்டுள்ளன:–

i. மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன்

ii. இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் டெக்னீசியன்

iii. பேசிக் டிசைனர் & விர்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்கல்)

iv. அட்வான்ஸ்டு சி. என். சி. மிஷினிங் டெக்னீசியன்

v. மெக்கானிக் எலக்ட்ரிக் வெஹிக்கிள்

2024ஆம் ஆண்டில் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் 6,925 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மேற்கண்ட நீண்ட கால தொழிற்பிரிவுகளுக்கு தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கட்டமைப்புகளைப் பயன்படுத்தி, மரபுசார் தொழிற்பிரிவு மாணவர்களுக்கு, 23 குறுகிய கால பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரி மாணவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கும் குறுகிய கால பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதுவரை 11,995 மாணவர்கள்

சேர்க்கப்பட்டு குறுகிய கால மற்றும் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிகள் பெற்றுள்ளனர்.

| **வ. எண்.** | **விபரம்** | **குறுகியகால பயிற்சி அளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் | **5,673** |
| 2. | அரசு தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் பயிற்சி பெற்றவர்கள் | **252** |
| 3. | மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் | **430** |
| 4. | குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிலாளர்கள் | **552** |
| 5. | பட்டதாரிகள் | **241** |
| 6. | பல்தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் | **3,654** |
| 7. | பொறியியல் கல்லூரி மாணவர்கள் | **875** |
| 8. | வேலையில்லா இளைஞர்கள் | **318** |
| **மொத்தம்** | | **11,995** |

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களைப் பயன்படுத்தி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தேவையான தொழில் திறனை மேம்படுத்தவும், நவீன தொழில்நுட்பங்களுக்கு இணையாக அவர்களின் பணித் திறனை மேம்படுத்தவும் உதவி மையம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

அனைத்து தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில், இண்டஸ்ட்ரியல் ரோபோடிக் வெல்டிங், சி.என்.சி லேத் மற்றும் மில்லிங் மெஷின் புரோகிராமிங், 3டி பிரிண்டிங், லேசர் கட்டிங், எலக்ட்ரானிக் கண்ட்ரோல் போர்டுகள் அசெம்பிளிங், புரோகிராமிங் மற்றும் இன்டர்நெட் ஆப் திங்ஸ் பயன்படுத்தி சோதனை செய்தல், மேம்பட்ட அச்சிடும் தொழில்நுட்பம் மற்றும் பேட்டரி மின்சார வாகன தொழில்நுட்ப வல்லுநர் ஆகிய பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை 2,753

நபர்கள் சேர்க்கப்பட்டு, சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சி நிலைய மேலாண்மை குழுக்கள் மூலம் ரூ.26,07,450/- வருவாய் ஈட்டியுள்ளன.

## 3.28. அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்

மாநிலத்தில் 10 அரசு உதவி பெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசிடமிருந்து பராமரிப்பு மானியம் பெறுகின்றன. இந்த அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பெரும்பாலானவை சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் ஆகும். நலிவடைந்த சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள தொழிற்பயிற்சி அளிக்கும் பொருட்டு இந்நிலையங்களுக்கு அரசு மானியங்கள் வழங்கப்படுகின்றன. 2024-2025ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு மானியமாக ரூ.3.48 கோடி இத்தகைய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 3.29. தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள்

திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தொழிற்கல்வியில் தனியார் பங்கேற்பினையும் அரசு ஊக்குவித்து வருகிறது. தமிழ்நாட்டில் 311 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் தேசிய தொழிற்பயிற்சி குழும அங்கீகாரத்துடன் 29,396 இருக்கைகளுடன் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. 2024ஆம் ஆண்டில் இந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 13,038 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 3.30. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக் கட்டணம் வழங்குதல்

அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒப்புவிப்பு செய்யப்பட்ட இடங்களில் 50 விழுக்காடு இடங்களுக்கான பயிற்சிக் கட்டணத்தை தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாநில அரசு திரும்ப வழங்குகிறது. திறன் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கையை

அதிகரிக்கும் பொருட்டு, இத்திட்டத்தின் கீழ், பொறியியல் தொழிற் பிரிவுகளில் ஒரு மாணவருக்கு ஒரு வருடத்திற்கு ரூ.16,800/–ம், பொறியியல் அல்லாத தொழிற் பிரிவுகளில் ஒரு மாணவருக்கு ரூ.13,000/–ம் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு மாநில அரசு ஈடு செய்கிறது. 2024–2025ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 9,327 மாணவர்கள் ரூ.10.00 கோடி செலவில் பயனடைந்துள்ளனர்.

### 3.31. பொதுத் தேர்வு மற்றும் சான்றிதழ்கள்

புதுதில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்ககம், அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு அகில இந்திய தொழிற் தேர்வுகளை நடத்தி வருகிறது. 2024ஆம் ஆண்டில், இத்தேர்வுகளில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் முறையே 94% மற்றும் 86% தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி

பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ், தேசிய தொழிற் பயிற்சி குழுமத்தால் வழங்கப்படுகிறது.

மாநில தொழிற்பயிற்சி குழுமத்தின் (SCVT) கீழ் பயிற்றுவிக்கப்படும் பிரிவுகளில், 1,277 மாணவர்கள் தொழிற் தேர்வில் கலந்து கொண்டனர். 1,275 மாணவர்கள் தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழும (SCVT) சான்றிதழ் இத்துறையால் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு குறுகிய கால பயிற்சியும் வழங்கப்படுகிறது. இம்மாணவர்கள் மாநில தொழிற்பயிற்சி குழுமத்தால் (SCVT) மதிப்பீடு செய்யப்படுகின்றனர். 2024ஆம் ஆண்டில் 490 அணிகளில் 8,861 மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு

மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.31.1. தேசிய அளவில் முதலிடம் – அகில இந்திய தொழிற் தேர்வு

2024ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட அகில இந்திய தொழிற் தேர்வில் தமிழ்நாட்டை சேர்ந்த 29 மாணவர்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர். இதில் 24 மாணவர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையும், 5 மாணவர்கள் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களையும் சார்ந்தவர்களாவர். தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளில் முதல் வருடத்திலேயே 2 மாணவர்கள் இண்டஸ்ட்டிரியல் ரோபோட்டிக்ஸ் & டிஜிட்டல் மேனுஃபேக்சரிங் டெக்னீசியன் தொழிற்பிரிவிலும், 2 மாணவர்கள் மேனுபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல் & ஆட்டோமேஷன் தொழிற்பிரிவிலும் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர்.

இம்மாணவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 24.10.2024 அன்று பாராட்டி கௌரவித்துள்ளார்கள்.

## 3.32. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மேம்பட்ட படிப்புகள்

தொழிற்சாலைகளின் தேவையைப் பூர்த்தி செய்யவும், இளைஞர்கள் புதிய தொழில்நுட்பத்தில் அதிக வேலைவாய்ப்பைப் பெறவும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கீழ்க்கண்ட மேம்பட்ட பாடப்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:—

| வ எண் | தொழிற்பிரிவு |
|---|---|
| 1. | ஏரோநாட்டிக்கல் ஸ்ட்ரக்சர் & எக்யூப்மெண்ட் பிட்டர் |
| 2. | அடிட்டிவ் மேனுஃபேக்சரிங் டெக்னிஷியன் (3டி பிரிண்டிங்) |
| 3. | எலக்ட்ரிசியன் பவர் டிஸ்டிரிபியூஷன் |
| 4. | சென்ட்ரல் ஏர் கண்டிஷன் பிளான்ட் மெக்கானிக் |
| 5. | விண்டு பிளான்ட் டெக்னீஷியன் |
| 6. | சோலார் டெக்னீஷியன் |
| 7. | இன் பிளாண்டு லாஜிஸ்டிக்ஸ் |
| 8. | டெக்னீஷியன் மெகட்ரானிக்ஸ் |

| வ எண் | தொழிற்பிரிவு |
|---|---|
| 9. | ஸ்மார்ட்போன் டெக்னீஷியன் |
| 10. | ஆர்க்கிடெக்சுரல் அசிஸ்டண்ட் |
| 11. | டெக்னீஷியன் மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ் |
| 12. | ஆட்டோ பாடி ரிப்பேரிங் |
| 13. | டெக்னீசியன் பவர் எலக்ட்ரானிக்ஸ் |
| 14. | இண்டிரியர் டிசைன் & டெக்கரேட்டர் |
| 15. | டூல் & டை மேக்கர் (பிரஸ் டூல்ஸ் ஜிக்ஸ் & பிக்சர்ஸ்) |
| 16. | ஆப்பரேட்டர் அட்வான்ஸ்டு மிஷின் டூல்ஸ் |
| 17. | ஃபயர் டெக்னாலஜி & இண்டஸ்ட்டிரியல் ஸேப்டி மேனேஜ்மென்ட் |

## 3.33. தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம் (ATS)

"தொழில் பழகுநர் சட்டம் 1961", தொழிற்பழகுநர்களின் பயிற்சியை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதற்கும், தொழிற்சாலைகளில் உள்ள வசதிகளை பயன்படுத்தி செய்முறை பயிற்சி வழங்குவதற்கும் உருவாக்கப்பட்டதாகும். ஒரு குறிப்பிட்ட சதவீத பயிற்சியாளர்களை தொழில் நிறுவனத்தினர் தங்கள் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்துவதை கட்டாயப்படுத்துவதன்

மூலம் ஒரு திறமையான தொழிலாளர் சக்தியை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர், தொழிற் பழகுநர் சட்டம், 1961ன் கீழ் மாநில தொழிற் பழகுநர் ஆலோசகராக செயல்பட்டு வருகிறார். மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததாகும். தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்றவர்கள், அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உள்பட 40–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள தனியார் தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களாக பணியமர்த்தப்படுகின்றனர்.

ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, தேசிய மற்றும் மாநில தொழிற் சான்றிதழ்கள் பெற்ற தொழிற்

பழகுநர்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச உதவித் தொகை மாதம் ரூ.7,000/- ஆகும்.

குறிப்பிட்ட கால அளவில் தொழிற்பழகுநர் பயிற்சி முடித்த ஒவ்வொரு தொழிற்பழகுநரும் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் ஏப்ரல் / மே மற்றும் அக்டோபர்/நவம்பர் மாதங்களில் நடத்தப்படும் தொழிற் பழகுநர்களுக்கான அகில இந்திய தொழிற் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும். தேர்ச்சி பெற்ற தொழிற்பழகுநர்களுக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் ஒன்றிய அரசின் தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தால் வழங்கப்படுகிறது. 2024-2025-ஆம் ஆண்டில் மாநிலத்திலுள்ள 2,516 நிறுவனங்களில் 84,263 தொழிற்பழகுநர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.33.1. தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு திட்டம் (NAPS - 2)

இத்திட்டம் ஒன்றிய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால்

அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டத்தை செயல்படுத்தும் முகமையாக மாநில இயக்குநரகம் செயல்படுகிறது. தொழிற்பழகுநர் சட்டம் 1961–ன் கீழ் பணியமர்த்தப்பட்ட தொழிற்பழகுநர்களுக்கு உதவித்தொகையில் ஒரு பகுதியை வழங்குவதன் மூலம் தொழிற்பழகுநர் பயிற்சியை மேம்படுத்துவதை தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம்–2 (NAPS–2) நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 3.33.2. தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS–2) இன் கீழ் நிதி உதவி

1. தொழிற்பழகுநர் பயிற்சிக் காலத்தின் போது ஒரு தொழிற்பழகுநருக்கு வழங்கப்படும் உதவித் தொகையில் 25 சதவீத அளவிற்கு, அதிகபட்சமாக ரூ.1,500/– வீதம், தேசிய தொழிற்பழகுநர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் பகுதி உதவித் தொகையாக வழங்கப்படும்.

2. ஒன்றிய அரசின் உதவித் தொகை, தொழிற்பழகுநர்களின் வங்கிக் கணக்கில் நேரடி நிதி பரிமாற்றம் (DBT) மூலம் வழங்கப்படும்.

3. ஒன்றிய, மாநில அரசுத் துறைகள், பொதுத் துறை வங்கிகள் உள்ளிட்ட ஒன்றிய, மாநில பொதுத்துறை நிறுவனங்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் பாதுகாப்புத் திட்டம்–2ன் கீழ் உதவித் தொகை வழங்கப்படமாட்டாது.

4. இத்திட்டத்தின் கீழ் நேரடி நிதி பரிமாற்றம் மூலம் இதுவரை 51,612 தொழிற்பழகுநர்கள் பயனடைந்துள்ளனர்.

### 3.33.3. தொழிற்பயிற்சி பெறாதவர்களுக்கு தொழிற்பழகுநர் பயிற்சி வாய்ப்புகள்

தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (**NAPS**) புதிய தொழிற்பழகுநர்களை நியமிக்க நிறுவனங்களை ஊக்குவிக்கிறது. இப்பயிற்சியினை

பெறுவதற்கு குறைந்தபட்ச வயது 14 ஆக இருக்க வேண்டும்.

தொழிற்பயிற்சி பெறாத தொழிற்பழகுநர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் நேரடி பயிற்சியைப் பெறுகிறார்கள், இதன் மூலம் அவர்களின் திறன் மற்றும் வேலைவாய்ப்பினை மேம்படுத்துகிறார்கள். தொழிற்பிரிவுகளைப் பொறுத்து, பயிற்சி 6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரை நீடிக்கும். இந்த திட்டம் பயிற்சி செலவுகளைக் குறைப்பதன் மூலம் நிறுவனங்களுக்கு பயனளிக்கிறது மற்றும் பயிற்சியாளர்களுக்கு செய்முறை அனுபவத்தைப் பெற உதவி அவர்களின் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கிறது.

வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த தொழிற்பழகுநர்களுக்கு தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் (NAC) வழங்கப்படுகிறது.

### 3.34. தனியார் தொழிற் பள்ளிகள்

உள்ளூர் தொழில் நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் 114 சுயநிதி மற்றும் 21 தனியார் உதவி பெறும் தொழிற் பள்ளிகள் மாநிலத்தில் இயங்கி வருகின்றன. 2024ஆம் ஆண்டில் 5,461 மாணவர்கள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர். மின்சாரம், இயந்திரவியல், ஆட்டோமொபைல், மின்னணுவியல், விருந்தோம்பல், ஆயத்த ஆடை, தகவல் தொழில்நுட்பம், ஆபீஸ் ஆட்டோமேஷன் மற்றும் கட்டுமானத் துறை என 57 தொழிற்பிரிவுகளில் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சி காலம் ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை ஆகும்.

8–ஆம் வகுப்பு அல்லது 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். 15 தொழிற்பள்ளிகள் தொழில்நுட்ப ஆசிரியர்

சான்றிதழுடன் கூடிய பயிற்சியினை வழங்கி வருகின்றன. இச்சான்றிதழ் பள்ளிகளில் தொழில்நுட்ப ஆசிரியராக பணிபுரிவதற்கான கல்வித் தகுதியினை பூர்த்தி செய்கிறது. மாநில தொழிற்பயிற்சி வாரியம் பொதுத் தேர்வுகளை நடத்தி, தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்குகிறது. 21 தனியார் தொழிற் பள்ளிகள் அரசிடமிருந்து பராமரிப்பு நிதியுதவி பெற்று வருகின்றன. 2024–2025–ஆம் நிதியாண்டில், அரசு உதவி பெறும் தொழிற் பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியமாக ரூ.2.80 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### 3.35. நிலைய மேலாண்மைக் குழு

தொழிற்சாலைகள் மற்றும் பயிற்சி நிலையங்களுக்கிடையே நட்புறவு ஏற்படுத்திடும் வண்ணம் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் நம்பகமான தொழில் நிறுவன பங்குதாரரை தலைவராக கொண்டு நிலைய

மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நிலைய மேலாண்மைக் குழுவில், தலைவர் மற்றும் தொடர்புடைய தொழிற்சாலைகளிலிருந்து நான்கு உறுப்பினர்களும், அரசு சார்பாக ஐந்து உறுப்பினர்களும் உள்ளனர். அரசு தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் இக்குழுவின் உறுப்பினர் செயலராகவும் செயல்பட்டு வருகிறார். இவ்வாறாக, 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் நிலைய மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. முன்னோடி நிறுவனங்களான பவர் கிரிட் கார்ப்பரேஷன் இந்தியா லிமிடெட், ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட், ஷிவிங் ஸ்டட்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட், எல் & டி கட்டுமானம், சுந்தரம் கிளேட்டன் இந்தியா பிரைவேட் லிமிடெட், பி.எச்.இ.எல், ஓ.என்.ஜி.சி, என்.எல்.சி இந்தியா லிமிடெட், ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், டைட்டன் கம்பெனி லிமிடெட், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், இந்தியா சிமெண்ட்ஸ்

பிரைவேட் லிமிடெட் ஆகியவற்றின் பிரதிநிதிகள் நிலைய மேலாண்மை குழுக்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### 3.36. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை பொது மற்றும் தனியார் பங்களிப்பு மூலம் தரம் உயர்த்துதல்

இத்திட்டம் 2007–ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.80 கோடி செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. இந்த தொழிற்பயிற்சி நிலையங்களுக்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட நிலைய மேலாண்மைக் குழுக்கள் (Institute Management Committee) சங்கங்களாக அமைக்கப்பட்டு 1975–ஆம் ஆண்டைய சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒன்றிய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் நிலைய மேலாண்மைக் குழு சங்கங்கள் இடையே முத்தரப்பு ஒப்பந்தம் கையெழுத்திட்ட பின்னர், ஒன்றிய அரசால்

ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் ரூ.2.50 கோடி வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், 32 தொழிற்பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, 2,180 இருக்கைகளுடன் 69 புதிய தொழிற்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2022ஆம் ஆண்டு முதல் நிலைய மேலாண்மைக் குழு சங்கங்கள் தவணைமுறையில் கடன் தொகையினைச் செலுத்தி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் சிறந்த நிலைய மேலாண்மை குழுவிற்கும், சிறந்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு, சிறந்த நிலைய மேலாண்மை குழுவிற்கான விருது ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும், சிறந்த தொழிற்பயிற்சி நிலையத்திற்கான விருது இராணிப்பேட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் வழங்கப்பட்டுள்ளன.

### 3.37. டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருதுகள்

ஆண்டுதோறும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறந்த முறையில் திறன் பயிற்சி அளிக்கும் 12 சிறந்த ஆசிரியர்களுக்கு (முதல்வர்–2, பயிற்சி அலுவலர்–2, உதவி பயிற்சி அலுவலர்–4, இளநிலை பயிற்சி அலுவலர்–4) டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரில் நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தலா ரூ.10,000/– ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் கொண்டதாகும்.

### 3.38. படைப்புத்திறன் போட்டி மற்றும் மாநில திறனாய்வு போட்டிகள்

மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பிட்டர், டர்னர், மெஷினிஸ்ட், மெக்கானிக் மோட்டார் வெகிக்கிள் மற்றும் எலக்ட்ரீசியன் ஆகிய 5 தொழிற் பிரிவுகளில் படைப்புத்திறன் போட்டி ஆண்டுதோறும்

நடத்தப்படுகிறது. வெற்றியாளர்களுக்கு ரூ.50,000/- ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்காக 17 தொழிற் பிரிவுகளில் மாநில திறனாய்வு போட்டிகள் நடத்தப்படுகின்றன. வெற்றியாளர்களுக்கு ரூ.25,000/- ரொக்கப் பரிசும், தகுதிச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

## 3.39. பயிற்றுநர்களுக்கான பயிற்சி

தொழில்நுட்பம் நாளுக்குநாள் வளர்ந்து வருவதால் பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிப்பது கட்டாயமாகிறது. மாணவர்கள் பயன்பெறும் வகையில் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இப்பயிற்சியானது நவீன தொழில்நுட்பத்திற்கு

ஏற்றவாறு பயிற்றுநர்கள் தங்களது திறனை மேம்படுத்திக்கொள்ள வழிவகை செய்கிறது.

கீழ்க்கண்ட முன்னணித் தொழில் நிறுவனங்கள் / நிறுவனங்களில் தொடர்புடைய துறைகளில் பயிற்றுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்:–

1. தமிழ்நாடு சென்டர் ஆஃப் எக்சலன்ஸ் பார் அட்வான்ஸ்டு மேனுபேக்சரிங் – 59 பயிற்றுநர்கள்.
2. தமிழ்நாடு ஸ்மார்ட் அட்வான்ஸ்டு மேனுபேக்சரிங் சென்டர் – 39 பயிற்றுநர்கள்.
3. தேசிய திறன் பயிற்சி நிலையம், சென்னை – 20 பயிற்றுநர்கள்.
4. தேசிய எரிசக்தி பயிற்சி நிறுவனம், நெய்வேலி – 40 பயிற்றுநர்கள்.
5. பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல் லிமிடெட், திருச்சிராப்பள்ளி – 20 பயிற்றுநர்கள்.

6. அண்ணா நிர்வாக மேலாண்மைக் கல்லூரி சென்னை – 5 முதல்வர்கள்.
7. லார்சன் மற்றும் டூயூப்ரோ திறன் பயிற்சி அகாடமி, மும்பை – 61 பயிற்றுநர்கள்.
8. பெங்களூருவில் உள்ள குவெஸ்ட் அலையன்ஸ் மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் முதல்வர்கள் மற்றும் பணியமர்த்தும் அலுவலர்களுக்காக தலைமைப் பண்புகள் மற்றும் திறன்கள் குறித்த பயிற்சி சென்னையில் நடத்தப்பட்டது – 21 முதல்வர்கள் மற்றும் 94 பணியமர்த்தும் அலுவலர்கள்.
9. பூனாவில் உள்ள டாடா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட், தொழில் 4.0 தரத்திலான 5 தொழிற்பிரிவுகளில் 305 பயிற்றுநர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்தியது.

### 3.40. தகவல் தொழில்நுட்ப கண்காணிப்பு பிரிவு

தகவல் தொழில்நுட்ப கண்காணிப்புப் பிரிவு இயக்ககத்திலும், மண்டல அளவிலும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த செயல்பாடுகளை திறம்பட நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு துறையின் தேவைகளின் அடிப்படையில் இணையதளங்களையும், மென்பொருள்களையும் உருவாக்கி பராமரித்து வருகிறது. தொழிற்பயிற்சி நிலைய டேஷ்போர்டு, இணைய வழியாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சி கட்டணம் வழங்குதல், பணியமர்த்தம் குறித்த செயல்பாட்டினை கண்காணித்தல் மற்றும் தொழிற் பள்ளிகளுக்கான அங்கீகாரத்தினை இணைய வழியாக வழங்குதல் ஆகியவை இப்பிரிவின் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

இப்பிரிவின் செயல்பாடுகளில் காகிதம் இல்லாத அலுவலக செயல்பாடும், மாணவர் சேர்க்கையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதும், கணினி

அடிப்படையிலான தேர்வு (CBT) நடத்துதலை ஒருங்கிணைத்தலும், மின்னணு அலுவலக தீர்வுகளை அமல்படுத்துவதும் அடங்கும். தலைமையகத்தில் பயிற்சி பிரிவில் e-office 02.05.2024 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலாக இப்பிரிவால் மெய்நிகர் வகுப்பறைகள், ஸ்மார்ட் வகுப்பறைகள், மொழி மற்றும் மென்பொருள் திறன் ஆய்வகங்கள் மூலம் மாணவர் பயிற்சி தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

### 3.41. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியமர்த்துதல் தொடர்பான பணிகள்

தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு, தொழிற்கல்வி அளிப்பதன் மூலம் 100% வேலைவாய்ப்பளிப்பது தலையாய நோக்கமாகும். தமிழ்நாடு, பணியமர்த்துதலில் அதிக கவனம் செலுத்தி வேலைவாய்ப்பு விகிதத்தில் தொடர்ந்து முன்னேற்றத்தைக் காட்டி வருகிறது. அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பல முன்னணி

தொழில் நிறுவனங்கள் வளாக நேர்காணலுக்கு அழைக்கப்படுகிறார்கள். பயிற்சி காலம் முடிவடையும் போது பணியமர்த்தல் ஏற்பாடு செய்வதில் பணியமர்த்தும் அலுவலர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். 2024ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் 90.04% பேர் பல்வேறு தொழில் நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் மூலம் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வளாக நேர்காணல் நடத்தப்பட்டது. இதன் மூலம் தொழில் 4.0 தொழிற்பிரிவுகளில் பயிலும் மாணவர்கள் டாடா மோட்டார்ஸ், ஃபாக்ஸ்கான், ஸ்னைடர் எலக்ட்ரிக், டான்ஃபோஸ், பாரத் பயோடெக், டிபிஜ காம்போசிட், ஸ்டெல்லர் பிளாஸ்டிக் போன்ற முன்னணி தொழில் நிறுவனங்களில் பயனுள்ள சம்பளத்துடன் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 3.42. தொழிற்சாலையில் நேரடிப் பயிற்சி வழங்குதல்

பணியிடைப் பயிற்சி என்பது பயிற்சியின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகும். இது அனைத்து மாணவர்களுக்கும் நிகழ்நேர பணி சூழல்கள் மற்றும் நேரடி செய்முறை அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பயிற்சி மாணவர்களை தொழில் நிறுவன பணிகளை எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கை மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்கும். தேசிய தொழிற்பயிற்சி குழுமத்தின் நெறிமுறைகளின்படி 150 மணி நேரம் தொழிற்சாலைகளில் நேரடி பயிற்சி வழங்குவது அவசியமாகிறது. அதனடிப்படையில், தொழிற்சாலைச் சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாநிலத்தின் தொடர்புடைய தொழில்களில் உடனடியாக வேலைவாய்ப்பைப் பெறுவதற்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளவும் இப்பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 3.43. நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பிற்கான அடிப்படை ஆங்கிலப் பயிற்சி

மாணவர்களின் புரிந்துகொள்ளும் திறனை அதிகரிக்கவும், தொழிற்சாலைக்கு தொடர்புடைய திறனை அடையவும், "வேலைவாய்ப்பிற்கான அடிப்படை ஆங்கிலம்" என்ற பயிற்சி, நான் முதல்வன் திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகத்தால் பயிற்சியாளர்களுக்கு 60 மணி நேர பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முன்னணி பல்கலைகழகத்தால், பயிற்சிக்கு முந்தைய மதிப்பீடு, பயிற்சிக்கு பிந்தைய மதிப்பீடு என இரு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டில், இதுவரை 35,551 மாணவர்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

## 3.44. தொழிற்சாலை மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இடையிலான நட்புறவு

சமீபத்திய தொழில்நுட்பங்களின் அடிப்படையில் தற்போதைய தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு மேம்பட்ட திறன்களை வழங்குவதை உறுதி செய்வதில் தொழிற்பயிற்சி நிறுவனங்களின் தீவிர பங்கேற்பு முக்கிய பங்கு வகிக்கிறது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு, தொழில் நிறுவன பணிமனை அனுபவம், தொழிற்சாலை சுற்றிப்பார்த்தல், இண்டர்ன்ஷிப் பயிற்சி, நிலைய மேலாண்மைக் குழுவில் பங்கேற்பு மற்றும் மாணவர்களுக்கு விரிவுரைகள் வழங்குதல் போன்ற பணிகளை பல்வேறு முன்னணி தொழிற்சாலைகள் வழங்கி வருகின்றன.

இத்தகைய முயற்சிகளை முறையாகவும், திறம்படவும் செயல்படுத்திட, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும், தொடர்புடைய தொழிற்சாலைகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுகின்றன. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஒத்துழைப்பு மற்றும்

அறிவுபங்கீட்டிற்கான தெளிவான வழிகாட்டுதல்களை வகுக்கின்றன. நவீன தொழிற் சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு பயிற்சி சூழலை உருவாக்க இரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட பாலமாக அமைகின்றன.

டெய்கின் ஏர் கண்டிஷனிங் பிரைவேட் லிமிடெட், பவர் கிரிட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட், கார்போரண்டம் யுனிவர்சல் லிமிடெட், சிம்சன் அண்டு கோ லிமிடெட், இந்தியா பிஸ்டன்ஸ் பிரைவேட் லிமிடெட் உள்ளிட்ட சில முன்னணி தொழில் நிறுவனங்களுடன் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

பயிற்சி முறைகளை தொடர்ந்து மேம்படுத்தி தொழிற்சாலைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலம், தொழிற்பயிற்சி நிலையங்கள் தங்களின் செயல் திறனை வளர்ப்பதுடன், இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் சிறப்பாக பங்களிக்கின்றன.

## 4. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் என்பது ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். இது காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு உடல் நலப் பாதுகாப்பு, நோய்க்கான பலன்கள், மகப்பேறு சலுகை, ஊனமுற்றோர் சலுகை, வேலையின்மைக்கான உதவித் தொகை போன்றவற்றை வழங்குகிறது. இத்திட்டம் 1955ஆம் ஆண்டு ஜனவரி 23 முதல் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ சேவை முழுமையாக வழங்கப்படுவதோடு மட்டுமல்லாமல், காப்பீட்டாளருக்கு ஊதிய இழப்பு அல்லது உழைக்க இயலாத நிலை ஏற்படும்போது அதனை ஈடுசெய்யும் வண்ணம் பண உதவியும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் மூலம் மாநிலம் முழுவதும் 241 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மற்றும் 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மூலம் 43.77 இலட்சம் காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கும் 1.75 கோடி சார்ந்தவர்களுக்கும் (அதாவது தொழிலாளர்களின் மனைவி, குழந்தைகள் மற்றும் தொழிலாளர்களின் பெற்றோர்கள்) மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.

### 4.1. தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் நிர்வாக அமைப்பு

தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டமானது, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்ககத்தை தலைமையாக கொண்டு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ்நாடு முழுமைக்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் நிர்வாகம், நிதி, செயல்படுத்தல் மற்றும்

மேம்பாட்டிற்கு பொறுப்பானவர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநர் ஆவார்.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள 7 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் (தொ.அ.ஈ. திட்டம்) தலைமையின் கீழ் மாநிலம் முழுவதும் தற்போது 241 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் அயனாவரம், மதுரை, சிவகாசி, சேலம், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் ஓசூரில் உள்ள மருத்துவமனை கண்காணிப்பாளர்களின் தலைமையில் மாநிலத்தில் தற்போது 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் செயல்பட்டு வருகின்றன.

## 4.2. திட்ட நிதி

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டங்களின் நன்மைகளைப் பெறுவதற்கு (01.07.2019 முதல்) பணியாளர்கள் மற்றும் வேலையளிப்போர் முறையே 0.75% மற்றும் 3.25% நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் தங்கள் பங்களிப்பை செலுத்துகின்றனர். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகமும் மாநில அரசும் 7:1 என்ற விகிதத்தில் செலவினங்களைப் பகிர்ந்துகொள்கின்றன. இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ஏற்படும் மருத்துவ செலவில் 7/8 பங்கை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகமும், 1/8 பங்கை தமிழ்நாடு அரசும் வழங்குகிறது.

## 4.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்

தமிழ்நாடு அரசின் கீழ் 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும் மற்றும் புதுதில்லி, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக தலைமையகத்தின் கீழ் 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக மருத்துவமனைகள் செயல்படுகின்றன.

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மருத்துவம் – மக்கள் நல்வாவுத் துறையின் கீழ் செயல்படும் மருத்துவமனைகள்**

- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம்
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம்
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, ஓசூர்
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி
- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர்
- அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர்

**புதுதில்லி தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தின் கீழ் இயங்கும் மருத்துவமனைகள்**

- தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கே.கே.நகர், சென்னை

- ❖ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக மருத்துவமனை, திருநெல்வேலி
- ❖ தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழக மருத்துவமனை, திருப்பூர்

7 மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் (தொ.அ.ஈ.) மற்றும் 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன. சென்னை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கோயம்புத்தூரில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. திருநெல்வேலி மற்றும் திருப்பூரில் உள்ள 2 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளும் மற்றும் சென்னை கே.கே. நகர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும், புதுதில்லியில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி

கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

## 4.4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்

காப்பீடு செய்யப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு முழுவதும் கீழ்க்குறிப்பிட்ட மண்டலங்களில் அமைந்துள்ள 241 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மூலம் மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | மண்டல நிர்வாக மருத்துவ அலுவலகம் | மொத்த மாவட்டங்கள் | மருந்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 3 | 48 |
| 2. | மதுரை | 6 | 43 |
| 3. | சென்னை | 3 | 38 |
| 4. | வேலூர் | 4 | 31 |
| 5. | திருநெல்வேலி | 9 | 26 |
| 6. | சேலம் | 3 | 25 |
| 7. | திருச்சிராப்பள்ளி | 10 | 30 |
| | **மொத்தம்** | **38** | **241** |

### 4.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் ஆயுஷ் பிரிவுகள்

ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன் கூடுதலாக, ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா மற்றும் ஹோமியோபதி (ஆயுஷ்) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த சிகிச்சையும் காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | ஆயுஷ் பிரிவு | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆயுர்வேதம் | 8 | 13 |
| 2. | யோகா | 8 | -- |
| 3. | யுனானி | 3 | 3 |
| 4. | சித்தா | 8 | 43 |
| 5. | ஹோமியோபதி | 3 | 3 |

### 4.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேருவதற்கான தகுதிகள்

1) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் 10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் பணிபுரியும் பருவகாலம் அல்லாத தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு பொருந்தும்.

2) ரூ.21,000/– வரை மாத ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர தகுதியுடையவர்கள்.

3) நாள் ஒன்றிற்கு ரூ.176/– வரை ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு பங்களிப்பு தொகையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறார்கள்.

4) ரூ.25,000/– வரை மாத ஊதியம் பெறும் ஆட்டிசம், பெருமூளை வாதம், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் பல்வகை குறைபாடுகள் உடைய அனைத்து மாற்றுத்திறனாளி தொழிலாளர்–களுக்கும் இத்திட்டம் பொருந்தும்.

### 4.7. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள்

காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ், பல்வேறு சமூகப் பாதுகாப்புப் பலன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி

திட்டத்தில் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும் பங்களிப்பானது, அவசர மருத்துவ தேவை மற்றும் பிற இடர்களின் போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் நிதிச்சுமை ஏற்படாதவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது.

| **பங்களிப்பு காலம்** | **தொடர்புடைய நன்மை காலம்** |
|---|---|
| ஏப்ரல் 1 முதல் செப்டம்பர் 30 வரை | பின்வரும் ஆண்டு ஜனவரி 1 முதல் ஜுன் 30 வரை |
| பின்வரும் ஆண்டு அக்டோபர் 1 முதல் மார்ச் 31 வரை | ஜுலை 1 முதல் டிசம்பர் 31 வரை |

**(1) மருத்துவப் பலன்**

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் அவர் அந்நிறுவனத்தில் பணியிலிருக்கும் வரை

வழங்கப்படும் அல்லது முதல் நிலை சிகிச்சை (புறநோயாளி) மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு (உள்நோயாளி) போன்றவை வழங்கப்படும். உயர் சிறப்பு சிகிச்சை பெற, காப்பீடு செய்யப்பட்ட நபர் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து குறைந்தபட்சம் 6 மாதங்கள் காப்பீட்டு வேலைவாய்ப்பின் கீழ் பணியாற்ற வேண்டும் மற்றும் பங்களிப்பு காலத்தில் குறைந்தபட்சம் 78 நாட்கள் பங்களிப்பு செய்ய வேண்டும். குடும்பத்திற்கான உயர் சிறப்பு சிகிச்சை (SST) என்றால், காப்பீடு செய்யப்பட்ட நபர் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து குறைந்தபட்சம் 1 வருடம் காப்பீட்டு வேலைவாய்ப்பின் கீழ் இருக்க வேண்டும் மற்றும் குறைந்தபட்சம் 156 நாட்கள் (ஒவ்வொரு பங்களிப்பு காலத்திலும் 78 நாட்கள்) பங்களிப்பு செய்ய வேண்டும். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் ஆரம்ப சிகிச்சையும், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள

தனியார் மருத்துவமனைகள் மூலம் இரண்டாம் நிலை சிகிச்சை மற்றும் உயர்சிறப்பு சிகிச்சையும் வழங்கப்படுகின்றன.

## (2) உடல் நலமின்மைக்கான உதவி

ஒரு வருடத்தில் அதிகபட்சமாக 91 நாட்களுக்கு சான்றளிக்கப்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 70% ரொக்க இழப்பீடாக உடல்நலமின்மை பலன் வழங்கப்படும். உடல் நலமின்மை உதவித்தொகைக்கு தகுதி பெற, காப்பீட்டாளர்கள் 6 மாத காலத்தில், 78 நாட்களுக்கு பங்களிப்பு செய்திருக்க வேண்டும்.

## (3) நீட்டிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி

34 வீரியமிக்க மற்றும் நீண்ட கால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள காப்பீட்டாளர்களுக்கு ஊதியத்தில் 80% அதிகரிக்கப்பட்ட விகிதத்தில், இரண்டு ஆண்டுகள் வரை இவ்வுதவி நீட்டிப்பு செய்யப்படும்.

**(4) மேம்படுத்தப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி**

உற்பத்தி வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு பெண் கருத்தடை / ஆண் கருத்தடை போன்ற அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் போது, அதிகரிக்கப்பட்ட உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படும். கருத்தடை மேற்கொள்ளும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு 7 நாட்கள் மற்றும் 14 நாட்களுக்கு முழு ஊதியத்திற்கு சமமான அதிகரிக்கப்பட்ட இவ்வுதவி வழங்கப்படும்.

**(5) மகப்பேறு உதவி**

பெண் காப்பீட்டு நபர்களுக்கு, மகப்பேறு சலுகை அதிகபட்சமாக 26 வாரங்களுக்கு வழங்கப்படும். அதாவது முதல் 2 குழந்தைகளுக்கு மட்டும் மற்றும் பிரசவ தேதிக்கு 8 வாரங்களுக்கு மிகையாகாமலும் இருக்க வேண்டும். குழந்தை ஒப்படைக்கப்பட்ட நாளிலிருந்து குழந்தையை

பெற்றுக் கொள்ளும் தாய் / தத்தெடுக்கும் தாய் 12 வார மகப்பேறு சலுகையை பெற உரிமை பெறுவார்.

**(6) சார்ந்திருப்போருக்கான உதவி**

காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்து அல்லது அவர் செய்யும் தொழில் மூலம் ஏற்படும் நோயினால் இறக்க நேர்ந்தால், அவரின் ஊதியத்தில் 90% அவரைச் சார்ந்தவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

**(7) மாற்றுத்திறனாளிகளுக்கான சலுகை**

**(அ) தற்காலிக இயலாமைக்கான சலுகை**

காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், இவ்வுதவி வழங்கப்படும். இயலாமை தொடரும் வரை, ஊதியத்தில் 90 % மாதாந்திர தொகையாக இவ்வுதவி வழங்கப்படுகிறது.

**(ஆ) நிரந்தர இயலாமைக்கான சலுகை**

காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் காப்பீட்டாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், பணியில் இருக்கும்போது நிரந்தர இயலாமை ஏற்படின், நிரந்தர இயலாமைக்கான உதவி வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். மருத்துவ குழுவின் பரிந்துரையின்படி, சம்பாதிக்கும் திறன் இழப்பிற்கு ஏற்ப மாத ஊதியத்தில் 90% மாதாந்திர தொகையாக வழங்கப்படும்.

**(8) வேலையின்மைக்கான உதவித்தொகை**

**(அ) ராஜீவ் காந்தி ஷ்ராமிக் கல்யாண் யோஜனா**

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், குறைந்தபட்சம் 2 வருடம், அந்த தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை பார்த்திருப்பின், அவர்களுக்கு 24

மாதங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதுடன், அவரது சராசரி தினசரி ஊதியத்தில், 50% முதல் 12 மாதங்களுக்கும், அடுத்த 12 மாதங்களுக்கு 25% வழங்கப்படும்.

**(ஆ) அடல் பீமித் வியக்தி கல்யாண் யோஜனா**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகமானது 01.07.2018 முதல், காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட காப்பீட்டாளர், இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு மற்றும் தொடர்ச்சியாக 4 பங்களிப்பு காலங்களில் 78 நாட்களுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருந்தால், வருவாயில் 25% மிகாமல் 90 நாட்கள் வரை இழப்பீட்டு தொகை பணப்பயனாக வாழ்நாளில் ஒரு முறை வழங்கப்படும்.

**தளர்வான விதிமுறைகள் மற்றும் பங்களிப்பு நிபந்தனைகள்**

- காப்பீட்டாளர் வேலையின்மைக்கு முன்பு, குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் காப்பீடு செய்யக்கூடிய வேலையில் இருந்திருக்க வேண்டும் மற்றும் வேலையின்மைக்கு முந்தைய பங்களிப்பு காலத்தில், 78 நாட்களுக்கு குறையாமல் பங்களித்திருக்க வேண்டும் மற்றும் வேலையின்மைக்கு முந்தைய இரண்டு ஆண்டு காலங்களில் மீதமுள்ள மூன்று பங்களிப்புகளில் ஒன்றில், குறைந்தபட்சம் 78 நாட்கள் பங்களித்திருக்க வேண்டும்.

- வேலையின்மை தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

- வேலைவாய்ப்பின்மையின் போது, அதிகபட்சம் 90 நாட்கள் வரை செலுத்தப்பட வேண்டிய, முந்தைய நான்கு பங்களிப்புக்

காலங்களின் போது ஒரு நாளின் சராசரி வருமானத்தில் 50% நிவாரணம்.

**(9) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் பிற நன்மைகள்**

(அ) பேறுகால செலவுகள்

காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளருக்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி நிலையங்களில் பிரசவ வசதிகள் இல்லாதிருந்தால், ரூ.7,500/– பேறுகால படியாக வழங்கப்படும்.

(ஆ) இறுதிச் சடங்கு உதவி

காப்பீட்டாளர் இறக்க நேரிட்டால், இறுதிச்சடங்கு உதவித் தொகையாக ரூ.15,000/– அவரைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது இறுதிச் சடங்குகளைச் செய்யும் நபருக்கோ வழங்கப்படும்.

(இ) ஓய்வு பெற்ற காப்பீட்டாளர்களுக்கு மருத்துவ சலுகை / காப்பீட்டு வேலைவாய்ப்பை நிறுத்தியவர்கள் (ESI விதி 60/61 இன் கீழ்)

குறைந்தபட்ச பங்களிப்பாக வருடத்திற்கு ரூ.120/–செலுத்தியிருந்தால், காப்பீட்டாளர்–களுக்கு வயது முதிர்வு கால மருத்துவ சேவையின்கீழ் வழங்கும் பயன்கள் அவருக்கும் அவரின் குடும்ப தலைவிக்கும், வழங்கப்படும். மேலும் வயது முதிர்வின் மூலமும் விருப்ப ஓய்வு / பணியாளர் ஓய்வு திட்டம் மூலம் நிரந்த இயலாமை காரணமாக பணியிலிருந்து விலகும் பொழுதும், அவர்களின் மூலமாக பயன் அடைபவர்களுக்கும் (பயனாளர் மற்றும் மனைவிமார்களுக்கும்) பொருந்தும்.

(ஈ) ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் மற்றும் காதுகேளாதோருக்கான கருவி போன்ற உதவி

சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

(உ) தடுப்பூசிகள், எச்.ஐ.வி / எயிட்ஸ் நோய் கண்டுப்பிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற நோய் தடுப்பு வசதிகள் வழங்கப்படுகின்றன.

(ஊ) தேசிய திட்டங்களான குடும்ப நலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு திட்டம் செயல்முறைப் படுத்தப்படுகின்றன.

## 4.8. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

மருத்துவமனை மேம்பாட்டுக் குழு மூலம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் மருந்தக கட்டடங்களின் சிறிய மற்றும் பெரிய பழுது பார்க்கும் பணிகள், மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் போன்றவற்றிக்கு, மருத்துவமனை வளர்ச்சி நிதி வழங்கப்படுகிறது. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு மற்றும் குழு தலைவர் முடிவிற்கு

பின் இக்குழு கூட்டத்தில், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தால் வருடாந்திர பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புக்காக நேரடியாக நிதி வழங்கப்படுகிறது.

## 4.9. தனியார் மருத்துவமனைகளில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி பயனாளிகளால் செய்யப்படும் மருத்துவச் செலவுகளை மீளப் பெறுதல்

### (1) புரிந்துணர்வு ஒப்பந்தம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)

புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையின் (CGHS Rate) கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட 75 சிறப்பு மற்றும் 107 உயர் சிறப்பு சிகிச்சை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளில் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு கட்டணமில்லா மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில், காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள்

சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வொப்பந்தத்தின் கீழ், தனியார் மருத்துவமனைகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ) இயக்குநர் மூலம் காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைக்கான பட்டிகள் நேரடியாக தீர்வு செய்யப்படுகின்றன.

### (2) இரண்டாம் நிலை மருத்துவ செலவினை மீளப்பெறுதல்

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் அவசர கால கட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட மருத்துவமனைகள் தவிர, தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவ அலுவலர்கள் மற்றும் மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்கள் அவர்களின் அதிகார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில்,

மருத்துவ செலவு மீள பெறும் பட்டிகள் தொடர்பான கோரிக்கைகளை, ஒன்றிய அரசின் மருத்துவ திட்ட (Central Government Health Scheme) விகிதத்தின் அடிப்படையில், பரிசீலனை செய்து உரிய தொகையினை, மீளப்பெற்று வழங்கப்படும். ரூ.1 இலட்சம் முதல் ரூ.5 இலட்சம் வரையிலான மருத்துவ செலவு மீளப்பெறும் பட்டிகள் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்குநர் அளவிலும், ரூ.5 இலட்சத்திற்கு மேற்பட்ட பட்டிகள் அரசு அளவிலும் காப்பீட்டாளர்களுக்கு மீளப்பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

**4.10. காப்பீடு செய்யப்பட்ட நபர்களுக்கு உயிர்காக்கும் மருந்துகளை வழங்குதல்**

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களுக்கான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் துணை மருந்துகள் தேவையினை பொருத்து மத்திய விலை ஒப்பந்தத்தின்

அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன. மேலும், புற்றுநோய், ஹீமாட்டாலஜி மற்றும் சிறுநீரக நோய் ஆகியவற்றிற்கான உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும், காப்பீட்டு நபர்களுக்கு தேவைக்கேற்ப மருத்துவரின் பரிந்துரையின்படி, உடனடியாக வழங்கப்படுகின்றன.

### 4.11. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் வசதிகளை வலுப்படுத்துதல்

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் செயல்திறனை மேம்படுத்தவும், காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்கும், தேவையின் அடிப்படையில் 7 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில், உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## 4.12. புதிய 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளின் கட்டுமானம்

தமிழ்நாட்டில் திண்டுக்கல், கன்னியாகுமரி, ஈரோடு, செங்கல்பட்டு மற்றும் ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் புதிதாக 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் கட்டுவதற்கு, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகம் உத்தேசித்துள்ளது. ஸ்ரீபெரும்புதூர் மற்றும் தூத்துக்குடியில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி. மருத்துவமனைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

**சி.வி. கணேசன்**
**தொழிலாளர் நலன் மற்றும்**
**திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்**




மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13.01.2025 அன்று ரூ.8.13 கோடி செலவில் கட்டப்பட்ட விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலக வளாகங்கள் மற்றும் ரூ.19.20 கோடி செலவில் கட்டப்பட்ட சேலம் மண்டல பயிற்சி பிரிவு இணை இயக்குநர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை மற்றும் ஒரத்தநாடு தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்கள் மற்றும் விராலிமலை அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர் விடுதி கட்டடம் ஆகியவற்றை காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 08.03.2025 அன்று நடைபெற்ற உலக மகளிர் தின விழா – 2025 நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு, அரசு மானியத்தில் 100 ஆட்டோக்களை வழங்கினார்.



அகில இந்திய தொழில் தேர்வு 2024–ல் தேசிய அளவில் பல்வேறு தொழிற்பிரிவுகளில் முதலிடம் பெற்ற தமிழ்நாட்டை சேர்ந்த 29 மாணவ மாணவியர் 24.10.2024 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



அரசு தொழிற்பயிற்சி நிலைய, தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களில் உலகத்தரம் வாய்ந்த பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சென்ற ஆண்டில் 25,707 மாணவர்கள் பயிற்சி பெற்று 90.04% மாணவர்கள் பல்வேறு முன்னணி நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.




2024–2025 இல் நடைபெற்ற 463 வேலைவாய்ப்பு முகாம்களில் 16,458 வேலையளிப்பவர்கள் மற்றும் 2,49,372 வேலைநாடுநர்கள் கலந்துகொண்டனர். அதில் 47,314 வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.